291

# இளங்கோ வாசகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 JUL 1955

291
3-55

## முதற் படிவம்

சிறப்புப் பகுதி

(இந்தியா) லிமிடெட்

சென்னை - 1

TB
031 (6)
N55
131210

# இளங்கோ வாசகம்

[முதற் புத்தகம் - முதற் படிவம்]

இரண்டாம் பிரிவு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 OCT 1955

ப. முருகன், M. A.
மாகாணக் கல்லூரி, சென்னை

வித்துவான் தணிகை. உலகநாதன்
இந்து தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளி, சென்னை

புக்ஸ் (இந்தியா) லிமிடெட்
135, பவழக்காரத் தெரு :: சென்னை - 1

பதிப்புரிமை
முதற் பதிப்பு: நவம்பர், 1953
மறு பதிப்புக்கள்: மே, 1954; ஜூன், 1955

TB
031(6)
H55

*Approved by the Madras Text Book Committee for class use Vide Page 118 of Fort. St. George Gazette, supplement to Part I-B, dated 19-5-'54*

131210
600 008.

சாந்தி பிரஸ், சென்னை - 1.

# முன்னுரை

'இளங்கோ வாசகம்' என்னும் இந் நூல்வரிசை உரிமைபெற்ற நம் திருநாட்டு மாணவ மாணவியரின் தமிழ் வளம் கருதி வெளியிடப் பெற்றது. ஒவ்வொரு பாடமும் பன்முறை கூர்ந்து நோக்கி அரசிய லாரின் பாடத் திட்டத்தின் சீரிய நோக்கம் சிறிதும் வழுவா வண்ணம் தொகுக்கப்பட்டுள்ளது.

'புதிய கல்விமுறைக் கேற்ற புதிய புத்தகம் வேண்டும்' என்னும் ஆர்வம் மிக்கது இக் காலம். இந் நிலைக்குத் தகுந்தவாறு பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மாணவர் தம் மனப்போக்கினை நன்கு உணர்ந்து அவர்கள் விரும்பிக் கற்கும் வண்ணம் சொற்சுவை பொருட்சுவை நிரம்பிய கற்பனைகள், கதைகள், உரையாடல், நாடகம், வரலாறு, விஞ்ஞான வளர்ச்சி, வானொலிப் பேச்சு, கடிதம், கைத் தொழில் முதலிய பல துறைப் பாடங்கள் இந் நூல்வரிசையில் இடம் பெற்றுள்ளன.

அரசியலாரால் குறிப்பிடப்பட்ட குறட்பாக்களும் இதில் சேர்க் கப்பட்டுள்ளமை ஒரு சிறப்பியல்பாகும். உரைநடைப் பாடங்களும் செய்யுட் பாடங்களும் போதிய அளவிற்கு மேலும் கொடுக்கப்பெற் றுள்ளன. மாணவர் தம் சுவைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்பச் செய்யுள், உரைநடைப் பகுதிகளில் ஆசிரியர்கள் தம் விருப்பம்போல் வேண்டுவன வற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

இந்நூலில் வரும் தம் பாடல்களையும் பாடச் செய்திகளையும் சேர்த்துக்கொள்ள இசைவு வழங்கிய கவிஞர்கட்கும் பதிப்பகத்தின ருக்கும் பத்திரிகாசிரியர்கட்கும் எங்கள் உளமார்ந்த நன்றி.

வருங்காலப் பெரியோர்களாகிய மாணவர் உலகத்துக்கு இந்நூல் காணிக்கையாகும். இதனை எங்கள் இனிய தமிழாசிரியத் தோழர் களும், தலைமையாசிரியர்களும், பள்ளிக்கூடத் தலைவர்களும், மாவட் டக் கல்வி ஆணையாளர்களும் அன்புடன் ஏற்று இத்துறையில் எங்க ளுக்கு மேன்மேலும் ஊக்கமளிப்பார்கள் என்னும் நம்பிக்கை யுடையேம்.

ஆக்கியோர்

# பொருளடக்கம்

## செய்யுட் பகுதி


| எண் | | | பக்கம் |
| --- | --- | --- | --- |
| I. | கடவுள் வாழ்த்து | | 1 |
| II. | நீதிப் பகுதி | | |
| 1. | விவேக சிந்தாமணி | ... | 3 |
| 2. | இன்னா நாற்பது | ... | 5 |
| 3. | சதகங்கள் | ... | 7 |
| III. | கதைப் பகுதி | | |
| | வெள்ளைக் காக்கை | ... | 11 |
| IV. | வருணனைப் பகுதி | | |
| 1. | செந்தாமரை | ... | 15 |
| 2. | வாத்து | ... | 16 |
| V. | பலவகைப் பாடல்கள் | ... | 18 |


## உரைநடைப் பகுதி


| | | | |
| --- | --- | --- | --- |
| 1. | தமிழ்த் திருநாடு | ... | 21 |
| 2. | எங்கள் மைசூர்ப் பயணம் | ... | 27 |
| 3. | பர்மியரைப் பார் | ... | 35 |
| 4. | அஜந்தா மலைக்குகைகள் | ... | 43 |
| 5. | கிரேக்கப் படையெழுச்சி | ... | 51 |
| 6. | மின்சாரத்தின் அற்புதங்கள் | ... | 58 |
| 7. | வெளிநாட்டுக் கடிதங்கள் | ... | 65 |
| 8. | சுதந்திர நாட்டில் மாணவர் கடமை | ... | 74 |

# I. கடவுள் வாழ்த்து

உலக மூன்று மொருங்குட னேத்துமாண்
திலக மாகிய திறலறி வன்னடி
வழுவில் நெஞ்சொடு வாலிதின் ஆற்றவும்
தொழுவல் தொல்வினை நீங்குக வென்(று) யான்.

—வளையாபதி

## முறையீடு

திருவும் அறிவும் திறனும் வலிவும்
உருவும் எழிலும் உயர்நன் னடையும்
பரிவும் கொடையும் பணிவும் புகழும்
மருவும் வரம்நீ இறைவா, தருவாய். 1

கலையின் நிறைவும் கலங்கா நிலையும்
மலையின் உயர்வும் மணியின் தெளிவும்
துலையின் நிறைபோல் துகளில் மொழியும்
தலைவா, எமக்கே தருவாய், தருவாய். 2

வாய்மை வீரம் வண்மை முறைமை
தாய்மைத் தமிழில் தனிநற் புலமை
தூய்மை இவைதாம் தொழுவோம் தரவே
சேய்மைப் பொருளே! செவிசாய்த் தருளே. 3

—பேராசிரியர் மயிலை. சிவ. முத்து

## குறிப்புரை

வளையாபதி ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று. இந் நூல் தற்காலத்தே முழுவதுமாகக் கிடைப்பதில்லை. அறிவன்-அருகதேவன். வழுவில்-குற்றமில்லாத. வாலிதின்-தூய்மையாக. தொழுவல் - வணங்குவேன்.

முறையிடு என்னும் தலைப்பில் அடங்கிய பாடல்களை இயற்றிய முதுபெரும்புலவர் மயிலை சிவ. முத்து அவர்கள் சென்னைக்கடுத்த மயிலாப்பூரில் பிறந்தவர். தமிழ் வளர்ச்சிக்காகவும் தமிழாசிரியர்கள் முன்னேற்றத்துக்காகவும் அரியபணிகள் பல ஆற்றுபவர்.

திரு - அழகு. பரிவு - அன்பு. நன்னடை - நல்லொழுக்கம். மருவும் - அடையும். துலை - தராசு. துகள் - குற்றம். வண்மை - கொடைக் குணம். தனி - ஒப்பற்ற. சேய்மை - தொலைவில் உள்ள. அறிவுக்கு எட்டாத.

### வினாக்கள்

1. வளையாபதிச் செய்யுளில் ஆசிரியர் எதன் பொருட்டுக் கடவுளை வணங்குகிறார்?
2. முறையிடு என்னும் பகுதியில் ஆசிரியர் இறைவனிடம் வேண்டும் வரங்கள் யாவை?
3. கடவுளைச் சேய்மைப்பொருள் என்று குறிப்பிடக் காரணம் யாது?

### பயிற்சி

1. திறலறிவன், வழுவில், அறிவன்னடி, செவிசாய்த்தருள் - இவற்றைப் பதம் பிரித்து எழுதுக.
2. தொன்மை+வினை, நன்மை+நடை, துகள்+இல், நன்மை+புலமை—இவற்றைச் சேர்த்து எழுதுக.
3. முறையிடு என்னும் பகுதியில் உள்ள செய்யுட்களின் பொருளை உரைநடைப்படுத்தி ஒரு கட்டுரையாக எழுதுக.

# II. நீதிப் பகுதி

## 1. விவேக சிந்தாமணி

தண்டா மரையி னுடன்பிறந்துந்
    தண்டே னுகரா மண்டூகம்
வண்டே கானத் திடையிருந்து
    வந்தே கமல மதுவுண்ணும்
பண்டே பழகி யிருந்தாலும்
    அறியார் புல்லோர் நல்லோரை
கண்டே களித்தங் குறவாடித்
    தம்மிற் கலப்பர் கற்ருேரே. 1

வானர மழைதனில் நனேயத் தூக்கணங்
தானெரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும்
ஞானமும் கல்வியும் நவின்ற நூல்களும்
ஈனருக் குரைத்திடி லிடர தாகுமே. 2

பெருத்திடு செல்வமாம் பிணிவங் துற்றிடில்
உருத்தெரி யாமலே வொளிம ழுங்கிடும்
மருத்துள தோவெனில் வாக டத்திலே
தரித்திர மென்னுமோர் மருந்திற் றீருமே. 3

புத்திமான் பலவா னவான்
    பலமுளான் புத்தி யற்ருல்
எத்தனே விதத்தி னலும்
    இடரது வந்தே தீரும்

மற்றொரு சிங்கந் தன்னை
வருமுயல் கூட்டிச் சென்றே
உற்றதோர் கிணற்றிற் சாயல்
காட்டிய உவமை போலாம். 4

—பல புலவர்கள்

## குறிப்புரை

பல புலவர்கள் பாடிய நீதிப் பாடல்கள் அடங்கிய நூலுக்கு விவேக சிந்தாமணி என்று பெயர்

1. தண்மை + தாமரை = தண்டாமரை. தண்மை + தேன் = தண்டேன். மண்டூகம் - தவளை. மது - தேன். புல்லோர் - அற்பர்.

2. வானரம் - குரங்கு. தூக்கணம் - தூக்கணங்குருவி. நெறி - அறிவுரை. ஈனர் - அற்பர்.

3. வாகடம் - மருத்துவ நூல். உரு - உருவம், அழகு. தீரும் - நீங்கும்.

4. இடர் - துன்பம். சாயல் - நிழல்.

## வினாக்கள்

1. தவளைக்கும் வண்டுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

2. வானரம் மழையில் நனையக் காரணம் என்ன? தூக்கணம் கூறிய புத்திமதி யாது?

3. இரண்டாம் செய்யுளால் அறியப்படும் நீதி யாது.?

4. பெருஞ் செல்வத்தை ஆசிரியர் என்னவென்று குறிப்பிட்டுள்ளார்?

5. செல்வப்பிணிக்கு மருந்து யாது?

6. எவன் பலவான் ஆவான்?

### பயிற்சி

1. இரண்டு நான்காம் செய்யுட்களில் அடங்கியிருக்கும் கதைகளைச் சுருக்கி எழுதுக.

2. பண்டு, உறவாடி, பிய்த்திடும், நவின்ற-இவற்றைநும் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

3. முதற் செய்யுளில் அமைந்துள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எடுத்து எழுதுக.

## 2. இன்னா நாற்பது

1. ஆற்றல் இலாதான் பிடித்த படைஇன்னா ;
நாற்றம் இலாத மலரின் அழகின்னா ;
தோற்றம் இலாதான் துணிவின்னா ; ஆங்கின்னா ;
மாற்றம் அறியான் உரை.

2. எருதில் உழவர்க்குப் போகீரம் இன்னா ;
கருவிகள் மாறிப் புறங்கொடுத்தல் இன்னா ;
திருவுடை யாரைச் செறல்இன்னா ; இன்னா
பெருவலியார்க் கின்னா செயல்.

3. பொருளுணர்வா ரில்வழிப் பாட்டுரைத்த லின்னா ;
இருள்கூர் சிறுநெறித் தாந்தனிப் போக்கின்னா ;
அருளில்லார் தங்கட் செலவின்னா ; இன்னா
பொருளில்லார் வண்மை புரிவு.

4. தன்னைத்தான் போற்று(து) ஒழுகுதல் நன்கின்னா.
முன்னை உரையார் புறமொழிக் கூற்றின்னா;
நன்மை இலாளர் தொடர்பின்னா; ஆங்கின்னா;
தொன்மை உடையார் கெடல்.

— கபிலர்

## குறிப்புரை

கபிலர் என்னும் புலவர் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்தவர். அவர் இற்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முற்பட்டவர். இன்னா நாற்பது, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று.

1. ஆற்றல் - வலிமை. படை - ஆயுதம். நாற்றம் - மணம். மாற்றம் - விடை. தேற்றம் - தெளிவு.

2. புறங்கொடுத்தல் - பின்வாங்குதல். இன்னா - கெட்டது. திருவுடையார் - செல்வர். செறல் - விரோதம் கொள்ளுதல். பெருவலியார் - மிகவும் வலிமையுள்ளவர்.

3. இல்வழி - இல்லாத இடத்தில். கூர் - பொருந்திய, நிறைந்த. செலவு - போதல். வண்மை புரிவு - தருமம் செய்தல்.

4. புறமொழி - புறங்கூறுதல். கூற்று - சொல். தொடர்பு - நட்பு. தொன்மை - பழைமை.

## வினாக்கள்

1. இன்னா நாற்பது - இதன் பெயர்க்காரணமும் ஆசிரியர் பெயரும் கூறுக.
2. யாருடைய உரை இன்னாததாகும்?
3. உழவர்க்கு இன்னாதது எது?
4. எவ்விடத்தில் பாட்டுரைத்தல் கூடாது?
5. யாருடைய புறமொழி இன்னாததாகும்?

## பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைத்து எழுதுக.

(1) .........இல்லாத மலரின் அழகு இன்னா.

(2) பெருவலியார்க்கு இன்னா செயல்.........

(3) தொன்மை உடையார்.........இன்னா.

(4) நன்மையிலாளர்.........இன்னா.

2. ஆங்கின்னா, புறங்கொடுத்தல், அருளில்லார், செலவின்னா, நன்கின்னா—இவற்றைப் பதம் பிரித்துக் காட்டுக.

3. உங்கள் பாடப் பகுதியில் வந்திருக்கும் செய்யுட்களின் கருத்துக்களை அமைத்து அவற்றுடன் ஒற்றுமையுடைய உங்கள் கருத்துக்களையும் சேர்த்து ஒரு கட்டுரை எழுதுக.

# 3. சதகங்கள்

## வேண்டுவன

அதிவீரன் என்னிலும் தந்திர உபாயமுடன்
அடையலரை வெல்லல்வேண்டும் ;
ஆயிரம் வித்தைகற் றாலும்உல கந்தனில்
அடக்கம திருத்தல்வேண்டும் :
நதிகோடி நீந்திவந் தாலும்ஓ டந்தனை
நயந்துகரை சேரல்வேண்டும் :
ஞானதத் துவமுணர்ந் தாலும்உல கத்தினில்
நடக்கைதனை யறிதல்வேண்டும் ;

துதிசேர் குபேரன்என் ருலும்ஒரு லாபமுறு
தொழிலுடன் இருத்தல்வேண்டும் ;
துய்யவல் லமையுடையன் எனினும்ஒரு சார்பினல்
துரைகளைக் காணல்வேண்டும் ;
மதியூகி யென்னினும் பெரியோர்சொல் கொளல்
மணவாள நாராயணன் [வேண்டும்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே ! 1

—திருவேங்கட சதகம்

வாலிபந் தனில்வித்தை கற்கவேண்டும் ; கற்ற
வழியிலே நிற்கவேண்டும் ;
வளைகடல் திரிந்துபொருள் தேடவேண்டும் ; தேடி
வளர்அறம் செய்யவேண்டும் ;
சீலமுடை யோர்களைச் சேரவேண் டும்;பிரிதல்
செய்யா திருக்கவேண்டும் ;
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண் டும்;கொண்டு
தியாகம் கொடுக்கவேண்டும் ;
ஞாலமிசை பலதருமம் நாட்டவேண் டும்;நாட்டி
நன்ருய் நடத்தவேண்டும் ;
நம்பன்இணை யடிபூசை பண்ணவேண் டும்;பண்ணி
னுலும்மிகு பத்திவேண்டும் ;
ஆலம்அமர் கண்டனே ! பூதியணி முண்டனே !
அனகன்எம தருமைமதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே. 2

—அறப்பளீசுர சதகம்

## வேண்டாதன

பெற்றதாய் தந்தைதன் சுற்றமே முதலான
பெரியோரை முனிதல்வேண்டாம்;
பின்னென்று முன்னென்று பேசியே அவமானப்
பேர்கொண்டு திரிதல்வேண்டாம்;
உற்றவர்கள் போலஉட் பகையான வஞ்சகரை
ஒருநாளும் நம்பவேண்டாம் ;
ஒருவருக் கிச்சையாய்ப் பொய்சொலிப் பின்சபையில்
ஊமைபோல் நிற்றல்வேண்டாம் ;
சற்றுமே பொறுமையில் லாதவர்கள் சண்டையில்
தான்போய் விலக்கல்வேண்டாம் ;
தைரியந் தனில்விக்ர மாதித்தன் என்னினும்
தன்னையே புகழவேண்டாம் ;
மற்றென்றும் எண்ணாது செய்யவேண் டாமென்பர்
மணவாள நாராயணன்
மனதிலுரை அலர்மேலு மங்கைமண வாளனே!
வரதவேங் கடராயனே! 3

— திருவேங்கட சதகம்

## குறிப்புரை

நூறு பாடல்களைக் கொண்ட நூலுக்குச் சதகம் என்று பெயர். **திருவேங்கட சதகம்** திருப்பதியில் உள்ள திருமாலைப் பற்றிப் பாடப்பட்டது. இதன் ஆசிரியர் நாராயண பாரதியார்; வெண்மணி என்னும் ஊரைச் சார்ந்தவர். **அறப்பளீசுர சதகம்** கொல்லிமலையில் உள்ள அறப்பளீசுரர் என்னும் இறைவன்மீது பாடப்பட்டது. இதன் ஆசிரியர் அம்பலவாணக் கவிராயர். இவர் சிறந்த சிவபக்தர்.

1. அடையலர் - பகைவர். குபேரன் - செல்வன். சார்பு - துணைவர்.

2. வளைகடல் - வளைந்த கடல். ஞாலம் - உலகம். சுற்றிக்கொண்டே இருப்பதால் இப்பெயர் பெற்றது. இணையடி - அடியிணை என்று மாற்றுக. இரண்டு பாதங்கள் என்பது பொருள். பூதி - திருநீறு. மதவேள் - ஒரு வள்ளல்.

3. சற்றும் - சிறிதும். எண்ணுது - யோசியாமல்.

## விஞக்கள்

1. திருவேங்கட சதகம், அறப்பளீசுர சதகம் - இவற்றின் பெயர்க்காரணம் கூறுக. ஒவ்வொன்றின் ஆசிரியர் பெயரும் தருக.

2. ஆலமமர் கண்டன், அலர்மேல் மங்கை மணவாளன் - இப் பெயர்கள் யார் யாரைக் குறிக்கும்?

## பயிற்சி

கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை நிரப்புக.

1. அதிவீரனுயினும்..................வெல்ல உபாயம் வேண்டும்.

2. குபேரனுயினும் ஒரு..............தொழில் உடையவனுக இருக்கவேண்டும்.

3. ............பருவத்தில் கல்வி கற்கவேண்டும்.

4. எந்தச் செயலையும்.........செய்தல் வேண்டும்.

5. சிறிதும்.....................இல்லாதவர் சண்டையை விலக்கலாகாது.

# III. கதைப் பகுதி

## வெள்ளைக் காக்கை

இரையைத் தேடிக் காகம் ஒன்று
சுற்றி வந்தது.
எங்கள் வீட்டுக் கூரை மீது
வந்த மர்ந்தது.
தரையில் கொட்டிக் கிடந்த நல்ல
தானி யங்களைத்
தடையில் லாமல் புறுக்கள் கூடித்
தின்னக் கண்டது.





" கள்ளத் தனமாய்ப் புறுக்க ளோடு
சேர்ந்து நாமுமே,
களித்தே இரையைத் தின்ன வேண்டும் "
எனநி னைத்தது ;

வெள்ளை வர்ணத் தொட்டி ஒன்றை
நாடிச் சென்றது ;
மேனி முழுதும் அதில் நனைத்து
வெளியில் வந்தது.

திரும்பி வந்து புறாக்கள் நடுவே
சேர்ந்து கொண்டது;
திருட்டுத் தனமாய்த் தானி யத்தைத்
தின்ன லானது.




கறுப்புக் காகம் வெண்மை யாக
வந்தி ருப்பதைக்
கண்டு பிடிக்க வில்லை, அந்தப்
புறாக்கள் கூட்டமே.

களிப்பு மிகவும் கொண்ட காகம்
தன்னை மறந்தது ;
'காகா,' 'காகா,' 'காகா,' என்றே
கத்த லானது.

எளிதில் உண்மை கண்டு கொண்ட
புறுக்கள் யாவுமே
எதிர்த்து அதனைக் கொத்திக் கொத்தி
விரட்டி அடித்தன.

தப்பிப் பிழைக்க எண்ணிக் காகம்
உடன் பறந்தது.
தனது இனத்துக் காகக் கூட்டம்
தனைஅ டைந்தது.
அப்போ தந்தக் காகக் கூட்டம்
என்ன செய்தது?
ஆவலோடு 'வருக, வருக'
என்ற ழைத்ததா?

இல்லை, இல்லை, வெண்மை பூசி
வந்த காக்கையை
ஏதோ பறவை என்று அவைதாம்
எண்ணி விட்டன.
தொல்லை கொடுக்கும் பறவை என்று
கருதி விட்டதால்,
துரத்தித் துரத்திக் கோப மாக
விரட்டி அடித்தன.

பிறரை ஏய்க்க நினைத்துக் காகம்
வேடம் பூண்டது.
பிறந்த இனத்துப் பறவை கூடத்
துரத்தி அடித்தது.

பறந்து பறந்து இங்கும் அங்கும்
அலைந்து திரிந்தது.
பாவம், பின்னர் அந்தக் காக்கை
என்ன ஆனதோ?

— குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

## குறிப்புரை

இஃது ஈசாப்புக் கதையைத் தழுவி எழுதப்பட்டதாகும். குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் சிறுவர்கள் விரும்பும்வகையில் எளிய இனிய பாடல்களும் கட்டுரைகளும் எழுதுவதில் வல்லவர். இவர் **'பூஞ்சோலை'** என்னும் மாத இதழின் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

வண்ணம் - வர்ணம். இனம் - கூட்டம். தொல்லை - துன்பம். ஏய்க்க - ஏமாற்ற.

## வினாக்கள்

1. தானியங்களைத் தின்பதற்காகக் காக்கை செய்த தந்திரம் யாது?
2. காக்கை தன்னைத்தானே எவ்வாறு வெளிப்படுத்திக் கொண்டது?
3. உண்மையான காக்கைகளும் வெள்ளைக் காக்கையை விரட்டக் காரணம் என்ன?
4. இப் பாடத்தால் நீ அறியும் நீதி யாது?

## பயிற்சி

1. இக் கதையைச் சுருக்கி உரைநடையில் எழுது.
2. இக்கதையைப் புருக்கூட்டத்தில் ஒன்று கூறுவது போல மாற்றி எழுது.

# IV. வருணனைப் பகுதி

## 1. செந்தாமரை

கண்ணாடித் தரையின் மீது
கண்கவர் பச்சைத் தட்டில்
எண்ணாத ஒளிமுத் துக்கள்
இறைந்தது போல்கு ளத்துத்
தண்ணீரி லேபட ர்ந்த
தாமரை இலையும், மேலே
தெண்ணீரின் துளியும் கண்டேன்
உவப்பொடு வீடு சேர்ந்தேன். 1

சிலநாட்கள் சென்ற பின்னர்க்
குளக்கரை சென்றேன்! பச்சை
இலைத்தட்டில் சிந்தும் பால்போல்
எழில்நீரும், கரிய பாம்பின்
தலைகள்போல் நிமிர்ந்தி ருந்த
தாமரைச் சிற்ற ரும்பும்
இலகுதல் காணப் பெற்றேன்
காட்சியின் இன்பம் பெற்றேன். 2

— பாரதிதாசனார்

# 2. வாத்து

## எடுப்பு

வாத்தினைப் பாரடா தம்பி - வெள்ளை
வாத்தினைப் பாரடா தம்பி.

## மேல் எடுப்பு

நித்தமும் தண்ணீரில் ஊறி - பேணும்
நீச்சினில் நன்ருகத் தேறி,
சுத்தமாய் வாழ்ந்திடும் வாத்து - நல்ல
சுகத்தின் அறிகுறி ஆச்சே!
— வாத்தினைப் பாரடா......

## அமைதி

ஓடிடும் சிறியதை விட்டு - வாத்து
ஒண்டிடும் பெரியதை அள்ளிக்
கூடிடத் தின்னுதல் போல - அறிவைக்
கூழாய்க் குடித்திடு தம்பி. 1
— வாத்தினைப் பாரடா......

வெள்ளைச் சிறகினை விரித்து - தான்
விரும்பிடும் பூவினை அணைத்து
மெள்ளத் தவழ்ந்திடும் வாத்து - அது
மேலான இன்பத்தின் ஊற்று. 2
— வாத்தினைப் பாரடா......

— நாக. முத்தையா

## குறிப்புரை

பாரதிதாசனுர் பாரதியாரின் மாணவர். இவர் புதுவையில் வசிக்கிருர். இவர் கவிதைகள் சொல்லழகும் பொருளழகும் சீர்திருத்தக் கருத்துக்களும் நிறைந்தவை.

கவிஞர். நாக. முத்தையா சிறுவர்களுக்குகந்த பாடல்களைப் பாடுவதில் வல்லவர். இவர் சென்னையில் வாழ்கிருர்.

1. உவப்பு - மகிழ்ச்சி. தெண்ணீர் - தெளிவான நீர். சிற்றரும்பு - சிறிய அரும்பு. இலகுதல் - விளங்குதல்.

2. தேறி - தேர்ச்சிபெற்று. சால - மிகவும். பேணும் - காப்பாற்றும்.

## வினுக்கள்

1. தாமரை இலையின் மேலுள்ள தண்ணீர்த் துளிகள் எப்படி இருக்கின்றன ?

2. தாமரை அரும்புகளுக்கு உவமையாகக் கூறப்பட்டவை யாவை ?

3. வாத்திஞல் நாம் அறியும் நீதிகள் யாவை ?

## பயிற்சி

1. கண்கவர், எண்ணுத, உவப்பொடு, கரகரவென, இவற்றைச் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. 'செந்தாமரை' முதற்செய்யுளில் உள்ள எழுவாய்ப் பயனிலை செயப்படுபொருள்களை எடுத்து எழுது.

3. வாத்திணப்பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

# V. பலவகைப் பாடல்கள்

## ஒன்றுக்கு ஒன்று பெரிது

எழுதரிது முன்னம் ; எழுதிய பின்னர்
பழுதறவா சிப்பரிது பண்பாய் ;—முழுதுமதைக்
கற்பரிது ; கற்பயனைக் காண்பரிது ; கண்டக்கால்
நிற்பரிது தான் அங்நிலே. 1

— அவ்வையார்

## பழக்கத்தால் வருவன

சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்;—நித்தம்
நடையு நடைப்பழக்கம் ; நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம். 2

— அவ்வையார்

## வழுதியின் திருமணப் பெருமை

வண்டமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்(து)
உண்ட பெருக்க முரைக்கக்கேள்—அண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள்பசியி னலே
சுருக்குண்டேன் சோறுண் டிலேன். 3

— அவ்வையார்

## ஏமாற்றம்

கல்லாத வொருவனைநான் கற்று யென்றேன் ;
காடெறியும் மறவனைநா டாள்வா யென்றேன் ;
பொல்லாத வொருவனைநான் நல்லா யென்றேன் ;
போர்முகத்தை யறியானைப் புலியே றென்றேன் ;

மல்லாரும் புயமென்றேன் சும்பற் ருேஐள ;
வழங்காத கையனைநான் வள்ளா லென்றேன் ;
இல்லாத சொன்னேனுக் கில்லை யென்ருன் ;
யானுமென்றன் குற்றத்தா லேகின்றேனே. 4

— இராமச்சந்திர கவிராயர்



## விகடராமன் குதிரை

முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே இருந்து (இ)ரண்டு பேர்தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடராமன் குதிரை
மாதம்போம் காத வழி. 5

— காளமேகப் புலவர்

## குறிப்புரை

அவ்வையார்என்ற பெயருடன் இரண்டுமூன்று புலவர்கள் இருந்துள்ளனர். இப்பாடல்களை எழுதியவர் கம்பர் காலத்தில் வாழ்ந்தவர். இவர் 12-ஆம் நூற்றுண்டினர். சங்க காலத்தில் ஓர் அவ்வையார் வாழ்ந்துள்ளார்.

இராமச்சந்திர கவிராயர் நகைச்சுவை ததும்பக் கவி பாடுவதில் வல்லவர். இவர் ஒரு பிற்காலப் புலவர்.

காளமேகப் புலவர் 15-ஆம் நூற்றுண்டினர். கறுத்த மேகம் நிறைந்த மழையை விரைந்து பொழிவதுபோல இவர் பற்பல பாடல்களை விரைவில் எழுத வல்லவராகையால் இப்பெயர் பெற்றுர்.

1. பழுதற - குற்றமில்லாமல். நிற்பது - ஒழுகுவது.

2. நித்தம் - நாடோறும். நடை - ஒழுக்கம். தயை - கருணை.

3. வழுதி - பாண்டியன். பெருக்கம் - பெருமை சுருக்குண்டேன் - வாடினேன்.

4. இச்செய்யுள் புலவரின் வறுமை நிலைமையைக் குறிப்பதாகும். எறியும் - வெட்டும். போர்முகம் - போர் முனை. மல் - வீரம். ஆகும் - பொருந்திய. சூம்பல்-மெலிந்த.

5. வேதம்போம் வாயான்-வேதம் ஓதும் வாயை உடையவன். காதவழி-ஏழரை நாழிகை வழி, பத்துக்கல் தூரம்.

## வினாக்கள்

1. ஒன்றுக்கொன்று அரிதாக இருக்கும் செயல்கள் யாவை?

2. திருமணத்துக்குச் சென்ற அவ்வையார் பட்ட துன்பங்கள் யாவை?

3. 'யானுமென்றன் குற்றத்தால் ஏகின்றேனே'— குற்றங்கள் யாவை?

4. விகடராமன் குதிரை எப்படிப்பட்டது?

5. காளமேகப் புலவரின் பெயர்க் காரணம் கூறு.

# உரைநடைப் பகுதி

## 1. தமிழ்த்திரு நாடு

உலகில் முதன் முதலாகத் தோன்றிய நாடு நம் தமிழ் நாடேயாகும். தமிழ் வழங்கும் நாடு தமிழ்நாடு எனப்படும். தமிழ்மொழி இன்ன காலத்தில் தோன்றியது என எவராலும் கூறவியலாத தொன்மை உடையது. பழங் காலத்தில் கிழக்கே ஜாவா வரையிலும் மேற்கே மடகாஸ்கர் வரையிலும் தமிழ்மொழி பேசப் பட்டு வந்தது என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். எனவே அக்காலத்தே நம் தமிழ்நாடு ஒரு பரந்த நிலப் பரப்பாக இருந்தது என்பது புலனுகும். தமிழ்நாடு பிற்காலத்தில் வடக்கில் திருவேங்கட மலையையும், தெற்கில் குமரி முனையையும், கிழக்கிலும் மேற்கிலும் கடல்களையும் எல்லைகளாகக் கொண்டு விளங்கியது.

தொன்று தொட்டே நம் தமிழ்நாடு வாணிபம், கைத்தொழில், நாகரிகம், கலை முதலியவற்றில் சிறந் தோங்கி இருந்தது. நம் நாடு நீர்வளம், நிலவளம், மலை வளம் முதலிய பல வளங்களுமுடையது. இயற்கைச் செல்வங்கள் நிறைந்த தமிழ் மக்கள் முற்காலத்தே கிரேக்கர், உரோமர், யவனர் முதலிய அயல்நாட்டு மக்களிடம் வாணிபத் தொடர்பு பூண்டு வளமுற வாழ்ந்து வந்தனர். அக்காலத்தே நம் நாடு செல்வம் கொழிக்கும் செந்தமிழ் நாடாகத் திகழ்ந்திருந்தது.

ஆதியில் நம் தமிழ்நாடு **சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு** என முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்

கப்பட்டிருந்தது. இவையேயன்றி **அருவாநாடு, புனல் நாடு** முதலிய சிறு நாடுகளும் தமிழகத்தில் அடங்கி இருந்தன. முத்தமிழ் நாடுகளை முறையே சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆண்டுவந்தனர். அவர்கள் கோன்முறை கோடாது நாட்டைச் சீரும் சிறப்புமுற ஆண்டுவந்தார்கள். அவர்கள் ஆட்சியில் குடிமக்கள் வளமும் இன்பமும் நிறைந்து விளங்கினர்.

சேரநாடு மேற்குக் கரையோரத்தில் உள்ளது. இது மலைவளம் நிறைந்த நாடு. இக்காலத்தில் திருவாங்கூர், கொச்சி, தென் கன்னடம், கோயம்புத்தூர், சேலம் என வழங்கிவரும் ஜில்லாக்கள் சேரநாட்டினுள் அடங்கும். இங்கு மலைகளிற் செறிந்த காடுகளிலிருந்து ஏலம் இலவங்கம், சந்தனம், மிளகு முதலிய வாசனைப் பொருள்கள் மிகுதியாகக் கிடைத்தன. இங்குள்ள காடுகளில் யானைகள் வதிந்தனவாதலால், 'வேழ முடைத்து மலைநாடு' என அவ்வையார் பாடியுள்ளார். இந்நாட்டில் **பெரியாறு, பொருநை** என்னும் வற்றாத வளநதிகள் ஓடுகின்றன.

சேரநாட்டின் தலைநகரம் **வஞ்சி**. இதற்குக் **கருவூர்** என்னும் மற்றொரு பெயருண்டு. **தொண்டி**யும் **முசிரி**யும் இந்நாட்டின் துறைமுகப் பட்டினங்களாகும். பழங் காலத்தில் அயல்நாட்டுக் கப்பல்கள் இத்துறைமுகங்களினின்றே இங்கு விளையும் வாசனைப் பொருள்களை ஏற்றிச் சென்றன. சேரநாட்டை ஆண்ட மன்னர்களுள் **சேரன் செங்குட்டுவன்** புகழ்மிக்கவன். அவன் இமயம் வரை சென்று, அங்குள்ள மன்னர்களை வென்று, இமயத்தில் தமிழ்க்கொடி பொறித்தனன் எனச் சரித்திரம் கூறுகின்றது. கற்புக்கரசி கண்ணகி வாழ்ந்ததும்

இவன் காலத்திலேயேயாம். சேரன் செங்குட்டுவன் இளவல் இளங்கோவடிகள். அவரே நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்னும் காவியத்தை இயற்றியருளினர்.

சோழநாடு தஞ்சையும் திருச்சியும் அடங்கிய நிலப் பகுதியாகும். சோழநாடு நிலவளம் செறிந்த நாடு. 'வான் பொய்ப்பினும் தான்பொய்யாக்' காவிரி பாய்வதால் சோழநாடு நெல்லும் கரும்பும் நிறைந்த நாடாகப் பொலிகிறது. எனவே, 'சோழவளநாடு சோறுடைத்து' என அவ்வையாரால் இந்நாடு பாராட்டப் பெற்றது. நெடிய வயல்களும், இனிய பொழில்களும் இந்நாட்டுக்கு வனப்பை அளிக்கின்றன. சோழநாட்டின் தலைநகரம் **உறையூராகும். தஞ்சை, திருவாரூர், காவிரிப்பூம் பட்டினம்** முதலிய பட்டணங்களும் சிற்சில சமயங்களில் தலைநகரங்களாக இருந்தன. காவிரிப்பூம் பட்டினமே அதன் துறைமுகமாகவும் இருந்தது. இதற்குப் **புகார்** என்றும் வேறு பெயர் உண்டு. சோழ மன்னர்களில் **கரிகாலன், இராசராசன், இராசேந்திரன்** முதலியவர்கள் மிகவும் புகழ்பெற்றவர்கள். **கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி** முதலிய செந்தமிழ்ப் புலவர்கள் சோழமன்னன் குலோத்துங்கனல் ஆதரிக்கப் பெற்ருர்கள்.

இன்று **மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி** என வழங்கும் ஜில்லாக்களைக்கொண்ட நிலப் பகுதியே அக்காலத்தே **பாண்டிய நாடு** என்று அழைக்கப்பட்டது. மிகப் பழங்காலத்தே பாண்டிய நாடு தென்கடலாகிய இந்துமகா சமுத்திரத்தில் நெடுந் தூரம் பரவியிருந்தது. அக்காலத்தே இதன் தலைநகரங்

களாக இருந்த **தென் மதுரை, கபாடபுரம்** முத லியவை கடல்கோளால் அழிந்தன. அதன் பின்னரே இன்றுள்ள மதுரை பாண்டிய நாட்டின் தலைநகராயிற்று. **வைகை, பொருநை** என்னும் இரண்டு ஆறுகள் இந்நாட்டிற் பாய்கின்றன. பாண்டியநாடு கடலை அடுத் திருந்ததால் இங்கு முத்தெடுக்கும் தொழில் சிறப்பாக நடைபெற்றது. 'பூமியர்கோன் தென்னாடு முத்துடைத்து' என்னும் செய்யுளடியால் இதனை நன்கறியலாம். கொற் கைத் துறைமுகத்தினின்று ஏராளமான முத்துக்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. **நெடுஞ் செழியன்** என்பவன் பாண்டியமன்னருள் சிறந்தவன்.

பாண்டிய மன்னர் மதுரையில் தமிழ்ச் சங்க மொன்றை நிறுவிச் செந்தமிழ் மொழியை வளர்த்து வந் தார்கள். அச் சங்கத்தில் தமிழாய்ந்த புலவர்கள் இயற் றியனவே **சங்க இலக்கியங்கள்** என வழங்குகின் றன. இச் சங்கச் செய்யுட்களால் நாம் நம் முன்னோர் களின் நாகரிகம், கைத்தொழில், வாணிபம், வீரம், போர்முறை, இல்வாழ்க்கை முதலியவற்றைப் பற்றிய செய்திகளை உணரலாம். சங்கச் செய்யுட்களே தமிழர் வரலாற்றுக்கு ஆதாரமாக இருக்கின்றன.

இங்ஙனம் பலவகைப் பெருமைகள் வாய்ந்தது நம் தமிழ்நாடு. அக் காலத்தினர் நாட்டையும் மொழியை யும் உயிரெனப் போற்றி வந்தார்கள். முடி மன்னர் மூவர் ஆண்ட முத்தமிழ்நாடு இன்று எந்நிலையில் உள் ளது? ஒரு காலத்தில் இமயம் முதல் குமரிவரை பரந் திருந்த நம் தமிழ்நாடு அளவில் குறைந்தது. வாணிபம் வளங் குன்றியது; கைத்தொழில் திறனும் மறைந்தது. வீரத்திலும் தமிழரிடம் முன்னேற்றமில்லை. நாம்

இன்று உரிமைபெற்ற திருநாட்டில் வாழ்கின்ரேம். இழந்த பெருமைகளை மீண்டும் பெற வேண்டாமா? தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் தளராத மொழிப் பற்றும் நாட்டுப்பற்றும் உடையவர்களாய்ப் பொருளாதாரத்திலும் தொழில் துறையிலும் சிறந்து வாழ்வோமாக.

## பயிற்சி

**பொருளறிக :**

| | | |
|---|---|---|
| ஆய்ந்த | கோன்முறை | வதிந்தன |
| இளவல் | தொடர்பு | வேழம் |
| கடல்கோள் | பூமியர்கோன் | |
| கோடாது | யவனர் | |

**விடை கூறுக :**

1. தமிழ்நாடு பண்டைக்காலத்தில் எவ்வளவு தூரம் பரவி இருந்தது?
2. தமிழ்நாட்டின் பிற்கால எல்லைகள் யாவை?
3. சேர நாட்டின் பெருமைகள் யாவை?
4. சேரன் செங்குட்டுவனைப்பற்றி ஒரு குறிப்பு எழுதுக.
5. இளங்கோவடிகளைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?
6. சேர சோழ பாண்டிய நாடுகளில் அடங்கும் ஜில்லாக்கள், தலைநகரங்கள், துறைமுகப் பட்டினங்கள் முதலியனவற்றைத் தனித் தனியாக எடுத்து எழுதுக.
7. சோழ மன்னன் குலோத்துங்கனுல் ஆதரிக்கப் பட்ட புலவர்கள் யாவர்?

8. பாண்டிய நாட்டின் பெருமைகளைச் சுருக்கி எழுதுக.

9. மதுரைத் தமிழ்ச் சங்கம் யாரால் நிறுவப் பெற்றது? அதன் பயன் யாது?

10. சங்கச் செய்யுட்களால் நாம் அறிவன யாவை?

## இலக்கணப் பயிற்சி

பாண்டிய மன்னர் தமிழ்ச் சங்கத்தை நிறுவினர்.

(செய்வினை வாக்கியம்)

தமிழ்ச் சங்கம் பாண்டிய மன்னரால் நிறுவப் பெற்றது.

(செயப்பாட்டு வினை வாக்கியம்)

**கீழ்வருவனவற்றுள் செய்வினைகளைச் செயப்பாட்டு வினைகளாக மாற்றி எழுதுக :**

1. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார்.

2. 'சோழவளநாடு சோறுடைத்து' என அவ்வையார் சோணாட்டைப் பாராட்டினார்.

3. நாம் இழந்த பெருமைகளை மீண்டும் பெற வேண்டாமா?

4. அன்னை கஸ்தூரியைக் காந்தியடிகள் அன்புடன் நேசித்தார்.

5. அக்காலத்தினர் நாட்டையும் மொழியையும் உயிரெனப் போற்றி வந்தார்கள்.

## 2. எங்கள் மைசூர்ப் பயணம்

(இராணிப்பேட்டையிலிருந்து மாணவர்கள் மைசூருக்குச் சென்று வந்த விவரம் இங்கே தரப்படுகிறது.)

காஃபி, டீ, இந்து, தாய்நாடு என்னும் சத்தம் எங்கள் காதைத் துளைத்தது. இரவில் மக்கள் ஈட்டத்தினுலும், நீண்ட பிரயாணத்தினுலும் அலுப்புற்றுத் தூங்கிய நாங்கள் கண்விழித்தெழுந்து அமர்ந்தோம். நாங்கள் ஏறிய புகைவண்டி பங்களூரை அடைந்தது. எல்லோரும் முதல் நாள் பங்களூரைக் கண்டு களித்து மறுநாள் மைசூருக்குச் செல்வதாகத் திட்டமிட்டுக் கொண்டோம்.

இயற்கை அழகும் செயற்கை எழிலும் நிறைந்த நகரங்களில் பங்களூரும் ஒன்று. அங்குப் பாதைகள் ஒரு கோடி மிகத்தாழ்ந்தும் மற்ருெரு கோடி மிக உயர்ந்தும், சில விடங்களில் நடுவில் குழிந்தும், இருபுறமும் உயர்ந்தும் விளங்குகின்றன. காலையில் குளிர் மிக அதிகமாகவும், நடுப்பகலில் வெப்பம் அதிகமாகவும் இருக்கின்றன. அங்குள்ள மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும், சாலைகளும், சோலைகளும் பார்ப்பவர் கண்களுக்கு விருந்தாக விளங்குகின்றன.

பங்களூரில் **கப்பன் பார்க்** என்னும் நந்தவனமும் **இலால் பாக்** என்னும் நந்தவனமும் கண்டு களித்தோம். அங்குள்ள பூஞ்செடிகளில் பலவிதமான நிறமுடைய மலர்கள் பூத்துக் காற்றில் அசையும் காட்சி, பார்க்கப் பார்க்க ஆனந்தமாக இருக்கிறது. பூஞ்செடிகள் ஆங்காங்கே வரிசை வரிசையாக நடப்பட்டுச்

செழித்து வளர்ந்திருக்கின்றன. பச்சைக் கொடிகள் நெடிய மரங்களில் பாம்பைப்போல வளைந்தும் நெளிந்தும் படர்ந்துள்ளன.



அங்கு நெருங்கித் தழைக்கும் செடிகளைத் தோட்டக்காரர்கள் ஒரே மட்டமாக வெட்டி அவற்றில் பலவித அழகிய உருவங்களைக் கத்தரித்து வைத்திருப்பது மிகவும் பாராட்டத்தக்க செயலாகும்.

பங்களூரைப் பார்த்துக் களித்து, மறுநாள் மைசூருக்குப் புறப்பட்டோம். மைசூர்த் தசராப் பண்டிகையைப் பார்ப்பதற்காகப் புகைவண்டியில் வந்த மக்கட் கூட்டம் மிகவும் நெருக்கமாக இருந்தது. வண்டியில் எள் விழுவதற்கும் இடமில்லை. எங்களில் பலர் நின்று

கொண்டே இருந்தார்கள். வண்டி மைசூரை அடைந்தது. வண்டியை விட்டுக் கீழே இறங்கினேம். நாங்கள் தங்குவதற்கென முன்னரே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஓர் உயர்நிலைப் பள்ளிக்குச் சென்ருேம்.

மைசூரை அடைந்ததும் மன்னர் மாளிகையைக் காண வேண்டுமென்ற அவா எங்களைப் பிடர்பிடித்துத் தள்ளிற்று. அன்று அரண்மனை மிகவும் சிறந்த முறையில் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சுவர்களில் ஆங்காங்கே மின்சார விளக்குகள் வரிசை வரிசையாகப் பதிக்கப்பட்டிருந்தன. பல வண்ணமுள்ள மின்சார விளக்குத் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. இரவில் அவை நட்சத்திரங்களை வான வீதியில் வரிசையாகத் தொங்கவிட்டாற்போல் ஒளி வீசலாயின. மைசூர் நகரமெங்கும் மின்சார விளக்குகளின் வெளிச்சம் நிலவு ஒளி போலவே காணப்பட்டது.

மைசூரில் பார்க்கத் தக்க சிறந்த இடங்களில் மிருகக் காட்சிசாலையும் ஒன்று. அங்கே சிங்கம், புலி, சிறுத்தை போன்ற காட்டு விலங்குகளை எப்போதும் கூட்டில்போட்டு அடைத்து வைக்காமல் திறந்த வெளிகளில் உயர்ந்த வேலிகளுக்கிடையில் இயற்கையான சூழ்நிலையில் வளர்த்து வருகிருர்கள். அம் மிருகங்கள் தப்பிப் போகாதிருப்பதற்காக அங்கு ஆழமான அகழிகள் வெட்டப்பட்டுள்ளன. அங்கு உலகத்தில் பல தேசங்களில் உள்ள அபூர்வமான பறவைகளும், மிருகங்களும் காணப்படுகின்றன். தண்ணீரில்வசிக்கும்மீன் வகைகளும், முதலை, நண்டுபோன்ற உயிரினங்களும் செயற்கை நீர்நிலைகளில் வளர்ககப்படுகின்றன. அம் மிருகக் காட்சிசாலை பார்க்க வருவோரின் கண்ணையும்,

கருத்தையும் ஒருங்கே கவர்கிறது. அங்குப் பறவைகள் பாடும் பண்ணில் மயங்குவார் சிலர்; குரங்குகளுக்குக் கொட்டைகளும், பழங்களும் கொடுத்துக் குதூகலிப்பர் சிலர்; யானைகளுக்குத் தீனியளித்து இன்புறுவார் சிலர். சிங்கத்தின் வீரநடையையும் புலியின் பாய்வையும் கண்டு தாமும் வீரரே என அளந்த நடையோடு நடந்து செல்வார் சிலர். மைசூரின் மிருகக் காட்சிசாலை இயற்கை எழில் விளங்கும் சோலையாகவே விளங்குகிறது.

நாங்கள் மைசூருக்குச் சென்ற அன்று அரசர் பவனி வரும் நன்னாளாகும். அன்று மாலை நான்கு மணிக்கெல்லாம் மக்கள் கூட்டம் கடல்போலத் திரண்டது. மன்னரைக் கண்ணுரைக் காணவேண்டுமென்னும் ஆசையால் மக்கள் பலர் அரசர் தெருவின் மாடிகளில் இரண்டு மணிக்கே சென்று முன்னிடம் பெற்றனர். நூற்றுக்கணக்கான சாரணரும், போர் வீரர்களும் அணிவகுத்து முன் சென்றனர். பரிகளும் கரிகளும் அலங்கரிக்கப்பட்டுப் பின் சென்றன. அரசாங்க உத்தியோகத்தர்கள் அவரவர்கட்குரிய உடை அணிந்து தத்தம் ஊர்திகளில் வரிசையாகச் சென்றனர். கடைசியில் மன்னர் பொன்னுடை பூண்டு பட்டத்து யானையின்மேல் அமர்ந்து பவனி வந்தார். வழியில் மக்கள் அளித்த ஆயிரக்கணக்கான மலர் மாலைகளை மன்னர் மகிழ்வுடன் ஏற்ருர். மைசூர் மக்கள் வழிநெடுக மாவிலைத் தோரணங்கள் கட்டினர். இன்னும் பல அலங்காரங்களும் செய்திருந்தனர். இங்ஙனம் மாலை நான்கு மணிக்குப் புறப்பட்ட மன்னர் பவனி இரவு பத்து மணி வரையில் நடைபெற்றது.

**பிருந்தாவனம்** என்னும் பூங்கா ஒன்று மைசூருக்குப் பனிரண்டு மைல் தொலேவில் உள்ளது. அது **கிருஷ்ணராஜ சாகரம்** என்னும் அணையை அடுத்து இருக்கிறது. பிருந்தாவனம் மைசூருக்குத் திலகம் போல் விளங்குகிறது. பிருந்தாவனத்தில் நாங்கள் கண்ட காட்சிகளை என்னென்று கூறுவோம்! எங்குப் பார்த்தாலும் பசும்புற்றரைகளே காணப்படுகின்றன! அங்கங்கே பூஞ்செடிகளும், மின்விளக்குகளும், நீர் தெளிக்கும் குழாய்களும் காணப்படுகின்றன. ஆங்கு வீசும் குளிர் காற்று மனத்துக்கு மிகவும் இன்பமாக இருக்கிறது. மைசூரிலிருந்து மாலை நேரங்களில் மக்கள் உல்லாசமாக உலாவுவதற்காகப் பிருந்தாவனத்துக்குச்



செல்கிறார்கள். இரவில் ஆங்குள்ள நீரூற்றுக்களைச் சேய்மையிலிருந்து பார்த்தால் அவை மேகங்கள் சூழப் பெற்ற வெண்மையான கூரைபோன்று காட்சி அளிக்

கும். அவ்வூற்றுநீர் கூடாரம் போன்றும், வில்போன்றும் வளைந்து விழுகின்றது. இவ் வினிய காட்சிகள் ஒவ்வொருவரும் கண்டு களிப்பதற்குரியன.

நாங்கள் மைசூரைப் பார்த்துத் திரும்பும் வழியில் **சீரங்கப்பட்டணம்** என்னும் சரித்திரப்பிரசித்திபெற்ற ஊருக்குச் சென்றோம். சீரங்கப்பட்டணம் மைசூருக்கு இரண்டு மைல் தொலைவில் உள்ளது. அங்குத்தான் மைசூர்ச் சண்டைகளில் போர்செய்து உயிர்நீத்த **திப்பு சுல்தான், ஹைதர் அலி** என்னும் முகமதிய மன்னர்களின் மாளிகைகள் காணப்படுகின்றன. அங்குச் சிவாலயமொன்று சோழமன்னரால் கட்டப்பட்டுள்ளது. திப்பு சுல்தான் மாளிகைச் சுவர்களில் மைசூர்ச் சண்டைகளைப்பற்றிய விவரங்களும், பட விளக்கங்களும் வரையப்பட்டுள்ளன. ஹைதர் அலி, அவர் மனைவி, திப்பு சுல்தான் முதலியவர்களின் கல்லறைகளை உடைய கோரி மிகவும் வனப்புடையதாக விளங்குகின்றது. ஆற்றுக்கு இடையில் உள்ள நிலப்பகுதி **அரங்கம்** எனப்படும். சீ என்னும் சொல் சிறப்பைக் குறிப்பதாகும். காவிரியாற்றுக்கு இடையில் அமைந்திருப்பதால் இவ்வூருக்குச் **சீரங்கம்** எனப் பெயர் வந்தது. நாங்கள் புண்ணிய நதியாகிய காவிரியாற்றில் குளித்து உண்டி கொண்டு வண்டி ஏறினோம். மாலை எங்கள் ஊராகிய இராணிப்பேட்டையை அடைந்தோம். எங்கள் மைசூர்ப் பிரயாணம் முடிந்தது. எனினும் இப் பிரயாணத்தை எங்களால் என்றுமே மறக்க முடியவில்லை.

## பயிற்சி

**பொருளறிக :**

| | | |
|---|---|---|
| அகழி | குதூகலித்தல் | திட்டம் |
| அபூர்வமான | சூழ்நிலை | பண் |
| அலுப்புற்று | சேய்மை | பிடர் |

**வாக்கியங்களில் அமைத்து எழுதுக :**

மாட மாளிகை, வரிசை வரிசையாக, கண்ணுர, வழி நெடுக.

**பதம் பிரித்து எழுதுக :**

நீரூற்று, பசும்புல், பொன்னுடை, நன்னுள்.

**எதிர்பதம் கூறுக :**

இயற்கை, தாழ்ந்து, அபூர்வமான.

**விடை தருக :**

1. பங்களூரின் இயற்கை யழகைப்பற்றிக் குறிப்பு எழுதுக.
2. மைசூர் அரண்மனை எவ்வாறு அலங்கரிக்கப்பட்டிருந்தது?
3. மைசூர் உயிர்க் காட்சி சாலையில் காணும் சிறந்த காட்சிகள் யாவை ?
4. பிருந்தாவனம் எவ்வாறு பெருமை வாய்ந்தது ?
5. மைசூர் மன்னரின் பவனி எவ்வாறு இருந்தது ?
6. சீரங்கப் பட்டணத்திற்கு அப் பெயர் வரக் காரணம் என்ன ?
7. சீரங்கப் பட்டணத்தின் சிறப்புகளைப் பற்றி உனக்கு என்ன தெரியும் ?

## இலக்கணப் பயிற்சி

1. பிருந்தாவனம் மைசூ ருக்குப்பனிரண்டு மைல் தூரத்திலுள்ளது.

2. நாங் கள் கண்ட காட் சிகளை என்னென்று கூறுவோம்!

மேலே கண்ட வாக்கியங்களை எளிதில் படிக்க முடியாது.

வாக்கியங்களை எளிதில் படிக்கவேண்டுமாயின் சொற்களுக்கு இடையிடையே இடம் விட்டு எழுத வேண்டும்.

(உ-ம்.) 1. பிருந்தாவனம் மைசூருக்குப் பனிரண்டு மைல் தூரத்திலுள்ளது.

2. நாங்கள் கண்ட காட்சிகளை என்னென்று கூறுவோம்!

**கீழ்வரும் சொற்களை இடம் விட்டுச் சரியாக எழுதுக:**

1. எங்களில்ப லர்நின் றுகொண்டே இருந்தார்கள்.
2. யானைகளு க்குத்தீனியளித் துஇன்புறுவா ர்சிலர்.
3. நாங்கள்புண் ணியநதியா கியகாவிரி யாற்றில் குளி த்தோம்.
4. ஆற் றிடைப்பூ மிக்குஅரங் கம்என் றுபெயர்.
5. புலிப சித்தா லும்புல் லைத்தின் னாது.

## 3. பர்மியரைப் பார்

நாம் நம் நாட்டினரின் நடையுடை பாவனைகளை அறிந்து கொள்வது போலவே பிறநாட்டு மக்களின் வாழ்க்கையைப் பற்றியும் அறிந்து கொள்வது அவசிய மாகும். ஒவ்வொரு நாட்டின் நீர்வளம், நிலவளம், தட்ப வெட்ப நிலைமைக்குத் தக்கபடி அந்நாட்டு மக்க ளின் வாழ்க்கை நிலையும் மாறுபடுவதுண்டு. அதனால் நாம் அவர்களுடைய நடை யுடை பாவனைகளை அறிந்து கொள்வதுடன் ஒருவருக் கொருவர் உற்ற சமயத்தில் உதவி புரிந்து கொள்ளவும் கூடும். பிற நாட்டு மக்களை நம் சகோதரர்களாகவே பாவித்து அவர்களுடன் பழகு வது நல்லது.

நம் நாட்டுக்குக் கிழக்கே இருப்பது பர்மா தேசம். அந் நாட்டில் வாழும் மக்களுக்குப் **பர்மியர்** என்று பெயர். முற்காலத்தில் பர்மாவும் நம் நாட்டுடன் சேர்ந்த நிலப்பகுதியாகவே இருந்தது. பர்மா சில ஆண்டு களுக்கு முன்னர்தான் இந்தியாவிலிருந்து ஆங்கிலேய ரால் பிரிக்கப்பட்டது. கீழ்த்திசை நாடுகளில் பர்மா நீர்வளம், நிலவளம், குடிவளம் முதலிய எல்லா வளங் களும் செறிந்து விளங்குகின்றது. இங்கு வானளாவிய மலைகளும், பேராறுகளும், அடர்ந்த காடுகளும் இருக் கின்றன. இந்நாட்டு இயற்கைக் காட்சிகள் எல்லோரும் பார்த்து மகிழ்ச்சி அடைதற்குரியவை. பர்மாவுக்கும், நம் நாட்டுக்கும் பழங்காலத்திலிருந்தே வாணிபம், கைத் தொழில் போன்ற துறைகளில் நெருங்கிய தொடர்பு உண்டு. கங்கைக் கரையில் வாழ்ந்த இந்தியர் பலர் அஸ்ஸாம் வழியாகப் பர்மாவுக்குச் சென்று குடியேறி

னர். குடியேறியவர்கள் இந்தியக் கலையையும் நாகரிகத்தையும் அங்குப் பரப்பினர். பர்மியரும் இந்திய நாட்டுக்கு வந்தனர். முற்காலத்தில் பெருமை வாய்ந்த **தட்சசீலம்** என்னும் பல்கலைக் கழகத்தில் பர்மாவிலிருந்து பல மாணவர்கள் வந்து கல்வி பயின்றனர். அவர்கள் நம் நாட்டு நாகரிகம், மொழி, கலை முதலியவற்றில் மிகவும் ஆர்வம் உடையவர்களாக இருந்தனர். பர்மிய மாணவர்கள் நம் நாட்டுக்கு வந்துதான் வடமொழி கற்றுக் கொண்டு போனார்கள். இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் சிறந்த போக்கு வரவு மார்க்கங்கள் உண்டு. அவை எவை எனத் தேசப்படத்தைப் பார்த்துச் சொல்லுங்கள்.

இக் காலத்தில் இந்திய மக்கள் பலர் பர்மாவின் தோட்டங்களிலும், தொழிற்சாலைகளிலும் வேலைசெய்து பிழைக்கின்றனர். நம் நாட்டிலிருந்து வாணிபத்தின் பொருட்டும் சிலர் அங்குச் சென்று தங்கலாயினர். அங்கே நிலங்களை நன்றாகப் பயிரிட்டுச் செல்வத்தைத் திரட்டியவர்களும் இந்தியர்களே. நகரங்களில் கடைகளில் உட்கார்ந்துகொண்டு பர்மியர்களுக்கு வேண்டிய பண உதவி செய்து அவர்களை முன்னேற்றத்துக்குக் கொண்டுவந்தவரும் நம்மவர்களே. நமது நாட்டிலிருந்து **நகரத்தார்** என்று கூறப்படும் தனவைசியர் பலர் அங்குக் குடியேறித் தங்கள் செல்வத்தை யெல்லாம் அந்நாட்டு மக்களுக்கு வழங்கினர். இத் தனவைசியர் செய்த தொண்டை அளவிட்டுக் கூற இயலாது. பர்மியரே இவர்களால்தான் தாங்கள் முன்னேற்றம் அடைந்தனர் என்று ஒப்புக்கொள்ளுகின்றனர். இங்ஙனம் இந்தியாவின் தொடர்பு பர்மாவுக்குப் பல நன்மைகளைத் தந்துள்ளது.

பர்மா வர்ணிபத்தில் இந்தியாவுடன் இணைந்து நிற்பதைப் போலவே சீனு, சையாம், மலேயா போன்ற நாடுகளுடன் தொடர்பு கொண்டுள்ளது. பர்மா, பற்பல ஆண்டுகளாக ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்டு அடிமைத் தளையினுல் பிணைக்கப்பட்டிருந்தது. பர்மியர் சுதந்திரத்தினைப் பெறப் பல கிளர்ச்சிகள் செய்தனர். இறுதியாக இன்று அவர்களும் நம்மைப்போலவே உரிமை வாழ்வு பெற்று மகிழ்கின்றனர்.



பர்மியர் சீனருக்கும் மலேயருக்கும் நடுத்தரமான ஒரு கலப்புச் சாதியார் ஆவர். அவர்கள் வெண்மையும் மஞ்சளும் கலந்த நிறத்தினர்; குள்ளமான உருவம் உடையவர்கள். மலைகளிலும் கிராமங்களிலும் வசிக்கும் பர்மிய மக்களில் சிலர் இன்னும் அநாகரிகமுள்ளவர்களாகவே காணப்படுகிருர்கள். நகரத்தில் வசிப்போர் நாகரிகமுடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

பர்மியரில் ஆடவரும் பெண்டிரும் கூந்தலைப் வளர்ப்பதில் மிகவும் விருப்பமுடையவர்கள். அவர்கள் கூந்தல் மிகவும் கறுத்திருக்கும். பர்மிய ஆடவன் தன் தலைமயிரைச் சேர்த்து உச்சந்தலையில் முடித்துக்கொள்வான். பெண்கள் தங்கள் நீண்ட கூந்தலைப் பலவகையான பின்னல்கள் இட்டுத் தொங்கவிட்டுக் கொள்வர். விலை

யுயர்ந்த பட்டாடைகளையும் ஆபரணங்களையும் அணிவதில் பர்மியருக்குப் பிரியம் அதிகம். ஆடவர்கள் தலையில் பாகை அணிவதும் உண்டு. பெண்கள் தங்கள் கூந்தலில் ஜப்பானியரைப் போலச் சீப்பைச் செருகிக் கொள்வதுண்டு.

பர்மியப் பெண்கள்தாம் குடும்பத்தை நடத்தும் பொறுப்பு மிக்கவர்கள். அவர்கள் வியாபாரமும் செய்கிறார்கள். பர்மியர் சிறிய தொழில்களைச் செய்வதை இழிவாகக் கருதுகிறார்கள். எனினும் தலைவனுக்கு அடங்கி நடத்தல், தான தருமங்கள் செய்தல், திருவிழாக்கள் கொண்டாடுதல் போன்ற நற்பழக்கங்கள் அவர்களிடம் காணப்படுகின்றன. தமக்குக் கிடைத்த செல்வத்தை அவர்கள் தாராளமாகச் செலவு செய்வார்கள். 'நாளைக்கு என்ன செய்வது' என்னும் எண்ணமே அவர்களுக்குக் கிடையாது. விடுதியில் அவர்களுக்கு மிக்க நம்பிக்கை உண்டு. இன்பம் வந்தால் மகிழ்வதும், துன்பம் வந்தால் வருந்துவதும் அவர்களிடம் இல்லை. இரண்டையும் அவர்கள் ஒரே தன்மையினை உடையதாகக் கருதுவர். இந் நற்குணம் ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கவேண்டிய அரிய குணமாகும். பர்மியர் பௌத்த மதத்தைச் சார்ந்தவர். ஆயினும், அவர்கள் ஜாதிமத வேறுபாடின்றி எல்லோரிடமும் அன்பாகவே பழகிவருகிறார்கள். அவர்கள் பேசும் மொழிக்குப் **பர்மிய மொழி** என்றே பெயர்.

பர்மியர் ஆட்டுச் சண்டை, சேவற்போர், குதிரைப் பந்தயம், மல்யுத்தம் போன்ற துறைகளில் தம் செல்வத்தைச் செலவழிப்பர். தமக்கு எப்படிப்பட்ட நெருக்கடியான வேலைகள் இருப்பினும் அவர்கள் திருவிழா,

வேடிக்கைகள் இவற்றைக் காணத் தவறமாட்டார்கள். தம் மதத்தின் உயர்ந்த எண்ணங்களைப் பர்மியர் நாடக



மாக நடித்து விளக்குவர். அந் நாடகத்தின் செலவைச் செல்வர் எவரேனும் ஏற்றுக்கொண்டு நடத்துவது வழக்கம். பர்மியரின் மதகுருக்கள் பௌத்த மடங்களில்

வசிக்கின்றனர். இத் துறவிகள் சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் சிறந்த சேவையைப் புரிந்து வருகின்றனர். ஒவ்வொரு பௌத்த மடத்திலும் சிறு பள்ளிக்கூடம் ஒன்று உண்டு.

பர்மியரும் நம் நாட்டினரைப் போலவே நெல்லரிசியைத்தான் உணவாகக் கொள்வார்கள். ஒரு பெரிய தட்டில் உணவைப் படைத்துக் குடும்பத்தினர் எல்லோரும் அதைச் சுற்றிலும் அமர்ந்து உண்பது வழக்கமாகும்.

பர்மியரிடத்தில் சில வேடிக்கையான பழக்கங்கள் உள்ளன. மழையைப்பற்றி அவர்கள் செய்யும் சடங்குகள் நமக்கு வியப்பினை அளிக்கும். நாட்டில் மழையே இல்லாது வறண்டு போனால் ஊருக்கு வெளியே உள்ள கோயிலுக்கு மேளதாளத்துடன் சென்று 'மழையை அழைத்து வருதல்' என்னும் திருவிழாக் கொண்டாடுவர். மிகுதியாகப் பெய்துவிட்டால் மழையை மீண்டும் இப்படியே கோலத்துடன் அழைத்துச் சென்று விட்டு விட்டு வருவார்கள். நமது நாட்டிலுங்கூட இதைப் போன்ற பழக்கம் உண்டு. ஆற்றில் பெருவெள்ளம் வந்து கரைபுரண்டு ஊர்களை அடித்துக்கொண்டு போகும்போது நம்மவர்கள் மேளதாளத்துடன் சென்று மலர், பழம், மாங்கல்யம் முதலியனவற்றை வெள்ள நீரிலே வைத்துக், "கங்கா தேவியே! எங்கள் பிழையைப் பொறுத்து எங்களுக்கு இடையூறு ஒன்றும் செய்யாது போய்விடுக," என்று வேண்டுவதுண்டு.

பர்மியரில் பெரும்பான்மையோர் விவசாயத் தொழிலை மேற்கொண்டிருக்கின்றனர். அவர்கள் உணவுக்குக் குறைவில்லை. அவர்கள் உழுது பயிரிட்டு மிகுதி

யாகும் அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். நமது நாட்டுக்குக்கூட பர்மா அரிசி வருவதுண்டு. இன்னுஞ் சிலர் பெருங்காடுகளில் வேலை செய்வார்கள்; அடர்ந்த காடுகளில் தேக்கு முதலிய மரங்களை வெட்டி வீழ்த்தி வெளிநாடுகளுக் கனுப்புவார்கள். பர்மா தேயத்துத் தேக்கு உலகில் சிறந்த மரமாகும். சிலர் பொன், வெள்ளி, ஈயம், வைரம், செம்பு முதலியன எடுத்து வெளி நாடுகளுக்கு அனுப்புவதைத் தங்கள் வேலையாக வைத்துக்கொண்டிருக்கின்றனர். இரங்கூன் வைரம் சிறந்ததென்று நமக்கு நன்ருகத்தெரியும். பர்மா மண்ணெண்ணெயை நாமறிவோம். பர்மாவில் மண்ணெண்ணெய்க் கிணறுகள் அதிகம். மண்ணெண்ணெயை எடுத்துச் சுத்தம் செய்து அனுப்புவதில் பலர் ஈடுபட்டிருக்கின்றனர். இங்ஙனம் அந்நாட்டு மக்கள் பலவகைப்பட்ட தொழில்களில் அமர்ந்து தங்கள் நாட்டை முன்னணிக்குக் கொண்டுவர முயற்சி செய்கின்றனர். அதுபோலவே நாமும் நம் நாட்டின் முன்னேற்றத்துக்கான தொழில்களை மேற்கொண்டு நலம் பெறவேண்டும்.

## பயிற்சி

**பொருளறிக:**

| | | |
|---|---|---|
| இணைந்து | சேவை | படைத்து |
| கிளர்ச்சி | துறை | பேராறு |
| செறிந்து | தொண்டு | வாணிபம் |

**விடை தருக:**

1. பர்மாவின் இயற்கை அமைப்பு எப்படிப்பட்டது?

2. பழங் காலத்திலிருந்தே இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் தொடர்பு உண்டு என்பது எவ்வாறு தெரிகிறது?

3. இந்தியரின் தொடர்பால் பர்மியர் அடைந்த நன்மைகள் யாவை?

4. பர்மியரிடம் காணப்படும் சில நற்பழக்கங்கள் யாவை?

5. பர்மியர் நாடகம் நடத்துவது எப்படி?

6. பர்மியர் குடும்பத்தில் அநுசரிக்கும் முறைகள் யாவை?

7. மழையை அழைத்தல் என்ருல் என்ன?

8. பர்மியரின் தொழில்கள் யாவை?

9. பர்மாவின் ஏற்றுமதிப் பொருள்கள் யாவை?

## இலக்கணப் பயிற்சி

1. குழந்தை பால் குடித்தது.

2. பர்மியர் பட்டாடை உடுப்பர்.

இங்குப் 'பால், குடித்தது' என்பதும் 'பட்டாடை, உடுப்பர்' என்பதும் ஒன்றுக்கொன்று பொருத்தமான சொற்கள்.

**கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை அமைத்து எழுது:**

1. பர்மியப் பெண்கள் கூந்தலைப் பல வகையாகப் (பின்னிக் கொள்வர், கட்டிக் கொள்வர்.)

2. என் தங்கை ஒரு பாட்டு......(பாடினுள், சொன்னுள், பேசினுள்.)

3. இராமன் ஓர் இட்டலி......(பருகினுன், தின்ருன், கடித்தான்.)

4. கொற்றன் வீட்டை.......(செய்தான், நட்டான், கட்டினுன்.)

5. கோழி காலையில்......(கத்திற்று, கூவிற்று, கரைந்தது.)

# 4. அஜந்தா மலைக்குகைகள்

நமது நாட்டில் பல சமயங்கள் தோன்றி மக்களுக்கு அறிவைப் புகட்டி வந்தன. சமயங்கள் பல தோன்றுவதும் அழிவதுமாகவே இருந்து வந்தன. இந்தியாவில் இந்துமதம் மறுமலர்ச்சி யடைந்து எங்கும் பரவ ஆரம்பித்தது. சாளுக்கிய அரசர்களால் இந்துமதம் தென்னிந்தியாவில் எங்கும் பரவலாயிற்று. அவ் வமயத்தில் பௌத்த மதம் சீர்குலையத் தொடங்கியது. அதனால் பௌத்த சந்நியாசிகள் மனக்கவலையடைந்து, பௌத்த மதக் கொள்கை, கலை, பண்பாடு அழியாது காப்பாற்ற வழிதேடித் தென்னிந்தியாவில் பல இடங்களில் பல கழகங்களை நிறுவினர்; பல மண்டபங்களை எழுப்பினர். பல குகைகளைக் குடைந்து ஆங்குத் தங்கித் தங்கள் மதத்தைப் போதித்து வந்தனர். இங்ஙனம் பௌத்தத் துறவிகளால் தென்னிந்தியாவில் கழகங்கள் உண்டாக்கப்பட்ட இடங்களுள் ஒன்றுதான் **அஜந்தா** என்பது.

அஜந்தா மலைக்குகைகளில் சிற்பக் கலையும், சித்திரக் கலையும் ஒருங்குகூடிக் காண்போரை மகிழ்விக்கின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த அஜந்தாச் சிற்பங்களைத் தமிழர்கள் நெடுநாட்களாக அறியாமல் இருந்தனர். ஏறக்குறைய 150 ஆண்டுகளுக்கு முன்னரே இவற்றைப் பற்றிய விவரம் தெரியவந்தது. அக்காலம் வரையிலும் இவற்றைப் பற்றிப் பேசுவோர் இல்லை; கேட்போர் இல்லை; கண்டு மகிழ்வோரும் இல்லை. இவை மலைகளுக்கு நடுவில், மரஞ்செடி கொடிகள் வானளாவி நெருங்கி வளர்ந்த புதர்களுக்கிடையில் அகப்பட்டுக் கொண்டு தம்பெருமையை மறைத்துக்கொண்டிருந்தன.

இவற்றின் அழகிய தோற்றம் அழிந்து போவதற்கு முன்னரே நாம் நம்முடைய நல்வினைப்பயனுல் இவற்றைக் கண்டோம். இவை இன்று நம் நாட்டின் சிற்பக் கலைக்கும் சித்திரக் கலைக்கும் சிறந்த எடுத்துக் காட்டாக அமைந்தன என்று எண்ணி எண்ணிப் பெருமிதம் கொள்ளுகிருேம்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சிற்பங்களைக் காணும் விருப்பமுடையவர்கள் பம்பாயினின்றும் டில்லிக்குப் போகும் புகைவண்டிப் பாதையில் **பச்சோரா** என்னும் ஊரில் இறங்க வேண்டும். அங்கிருந்து கிளை இருப்புப்பாதை வழியாகப் **பாஹுரை** யடையலாம். பாஹுரிலிருந்து மீண்டும் பதின்மூன்று மைல் சென்ருல் **பரத்பூர்** என்ற பெயருடைய கிராமத்தை யடையலாம். இவ்வூருக்கு நான்கு மைல்களுக்காப்பால்தான் அஜந்தாக் குன்றுகள் இருக்கின்றன. இக் குன்றுகளில் குகைகள் பல அமைந்துள்ளன. இவற்றைத்தான் அஜந்தா மலைக்குகைகள் என்று சொல்லு கிருேம்.

அஜந்தா துர்க்கம் நைஜாம் இராச்சியத்தின் வட கோடியில் உள்ளது. இதனருகில் ஒரு சிற்ருறும் ஓடு கிறது. இங்குள்ள குன்றுகளில்தான் இருபத்தொன் பது குகைகள் குடையப்பட்டுள்ளன. இவை மிகச் சிறந்த சிற்ப வேலைப்பாடு அமைந்து விளங்குகின்றன. ஆற்றின் பக்கத்தில் அமைந்திருக்கும் இக் குகைச்சுவரில் உள்ள பொன்னிறச் சித்திரங்கள் ஆற்றில் பிரதிபலித்து அழகுக்கு அழகு ஊட்டி விளங்குகின்றன. இவற்றின் முழு அழகையும் கண்டு மகிழவேண்டுமானுல், பாறைகளுக்குப் பாறை தாவ வேண்டும்; காட்டு வழியாகச்

செல்ல வேண்டும்; உடலை யொடுக்கிக்கொண்டு செடி புதர்களிடையே ஊர்ந்து செல்லவும் வேண்டும்.

இவ்வாறு காட்டு வழிகளைக் கடந்ததும் நாம் இருபத்தொன்பது குகைகளைக் காணலாம். இக் குகைகள் அனைத்திலும் பௌத்தத் துறவிகள் தங்களுக்குக் கிடைத்த ஒய்வு நேரங்களில் தங்களது கைத்திறனைக் காட்டியுள்ளனர். இக் குகைகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்; ஒன்று **சைத்தியம்**; மற்றொன்று **விஹாரம்**. சைத்தியம் என்று சொல்லப்படுபவை



முன்னே உயர்ந்த வில்வளைவான மண்டபமும், முட்டை வடிவமான சன்னலையும் கொண்ட கோயில்களாக விளங்குகின்றன. இவற்றின் உள்ளே புத்த பகவான் உருவச் சிலைகள் இருக்கின்றன. இங்கே நான்கு சைத்

தியங்கள் இருக்கின்றன. மற்றைய இருபத்தைந்து குகைகளும் விஹாரங்களாம். பௌத்த விடுதிகளுக்குத் தான் விஹாரங்கள் என்று பெயர். இந்த விஹாரங்கள் ஒவ்வொன்றின் நடுவிலும் ஒரு பெரிய மண்டபம் இருக்கின்றது. மண்டபத்தின் பக்கங்களிலே பல சிறு



வாயில்கள் இருக்கின்றன. இவையே பக்கத்திலிருக்கும் அறைகளுக்குச் செல்லும் வாயில்கள் ஆகும். ஒவ்வொரு மண்டபத்திலும் தலைவாயிலுக்கு எதிராக ஒரு மூலத்தானம் இருக்கின்றது, இந்த மூலத்தானத்தில் புத்தப் பெருமானது உருவச்சிலைகள் இருக்கின்றன.

பிறைவடிவமான பள்ளத்தாக்கிலேயே இக் குகைகள் அமைந்துள்ளன; குன்றுகளின் கீழே சில குகைகள் உள்ளன; நடுவில் சில இருக்கின்றன; உச்சியிலும் வேறு சில இருக்கின்றன. இக் குகைகளின்மேல் எப்போதும் சூரிய ஒளி படுவதில்லை. கீழ்த்திசையிலிருக்கும் குகைகள் மாலை நேரம் வரையிலும் இருண்டே கிடக்கும். இவை மாலைநேர வெயிலில் கண்ணைக் கவ

ரும் ஒளியுடையனவாக மாறுகின்றனவாம். மத்தியில் இருப்பன பகலில் எப்போதும் ஒலியுடன் விளங்கு கின்றன. பள்ளத்தாக்கின் மேற்குக் கோடியிலுள்ள



குகைகள் காலேயில் மட்டுமே வெயில் பட்டு வெளிச்ச மாக இருக்கின்றன.

இக் குகைகள் எல்லாம் கி. பி. இரண்டாம் நூற் ருண்டிலிருந்து ஏழாம் நூற்ருண்டுக்குள் குடையப் பட்டன வென்று சொல்லுவார்கள். இவற்றின் தோற் றத்தைக் காண்போர் அனைத்தும் ஒரே காலத்தில் உண் டாக்கப்படவில்லே என்றும் இவை மிகக் குறுகிய காலத் தில் அவசரமாகச் செய்யப்பட்டவையல்ல என்றும் உணர்த்துகிருர்கள். பல ஆண்டுகள் உழைத்த உழைப் பின் பயனுகவே இவை தோன்றின. முன்னர்க் கூறிய படி இவற்றின் தோற்றம் பௌத்தமதச் சார்புடையதே யாகும். குகைகளில் வெட்டப்பட்டுள்ள படிமங்கள் புத்தமதக் கொள்கைகளை எடுத்துக் காட்டுகின்றனவாய் அமைகின்றன. பௌத்த சமயத் துறவிகள் புத்தரை வணங்கும் காட்சி, புத்தர் திருமணக் காட்சி முதலியன

செதுக்கப்பட்டுள்ளன. சாளுக்கிய அரச பரம்பரையைச் சேர்ந்த இரண்டாவது புலிகேசன் பாரசீகத் தளபதிகளை வரவேற்பதாக இரண்டாவது குகையில் சிற்பமொன்று செதுக்கப்பட்டுள்ளது. புத்தர் வாழ்க்கை வரலாற்றைக் காட்டும் படங்கள் வரிசையாகச் சுவரில் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளன. மதச் சார்புடைய



இப்படங்களே யல்லாமல் மிருகங்களின் உருவங்களும் தனி மனிதர்களின் உருவங்களும் அழகாகத் தீட்டப் பட்டுள்ளன.

"அஜந்தாக் குகைகளில் காணப்படும் சித்திரச் சிற்ப வேலைப்பாட்டின் அழகை யாரால் கூறமுடியும்? இவற்றை நேரில் கண்டவரால்தான் உணரமுடியும். இவற்றின் எளிமையும், மத ஊக்கமும் எவ்வளவு அற்புதமாக எழுந்தோங்கி நிற்கின்றன!" என்று டே என்பவர் இவற்றைப் பற்றிப் புகழ்ந்து கூறியுள்ளார்.

இந்த அஜந்தாக் குகைச் சிற்பங்களில்தான் நம் நாட்டின் பெருமை பொதிந்து கிடக்கின்றது; நம் முன்னோரின் ஓவியத் திறமை உருப்பெற்று விளங்குகின்றது.

இவற்றைப் பொன்னேபோல் போற்றிக் காப்பது நம் நாட்டவரின் கடமையாகும்.

## பயிற்சி

**பொருளறிக :**

| | | |
|---|---|---|
| எடுத்துக்காட்டு | சமயங்கள் | மறுமலர்ச்சி |
| கலை | பண்பாடு | துர்க்கம் |
| கழகங்கள் | புகட்டுதல் | தளபதி |

**விடை கூறுக :**

1. அஜந்தா மலைக்குகைகளின் தோற்றத்தைப் பற்றிக் குறிப்பு எழுதுக.
2. இக் குகைகள் யாரால் உண்டாக்கப்பட்டன?
3. அஜந்தாக் குகைகள் எங்கே இருக்கின்றன?
4, 'சைத்தியம்' என்றால் என்ன? 'விஹாரம்' என்றால் என்ன?
5. இக் குகைகளைப் பற்றி டே என்பவர் என்ன கூறுகின்றார்?
6. அஜந்தாக் குகைகளால் நாம் அறியும் உண்மைகள் யாவை?

**தெரிந்து கொள் :**

அஜந்தாக் குகைகளின் சிற்பங்களில் சில சென்னைப் பொருட்காட்சி சாலையிலும் வைக்கப்பட்டுள்ளன.

உங்கள் ஊரில் ஏதேனும் பழைய சின்னங்கள் இருப்பின் அவற்றைப்பற்றி அறிந்து ஒரு குறிப்பு எழுது.

## இலக்கணப் பயிற்சி

. இது முற்றுப்புள்ளி
, இது காற்புள்ளி
; இது அரைப்புள்ளி
: இது முக்காற் புள்ளி
! இது உணர்ச்சிக் குறி
" " இவை மேற்கோள் குறிகள்

உங்கள் பாடங்களில் இவ்வகையான குறிகள் எவ்வெவ் விடங்களில் உபயோகப் படுத்தப்பட்டுள்ளன என்பதை நன்கு கவனிக்கவேண்டும்.

கீழ்வரும் வாக்கியங்களில் தகுந்த நிறுத்தக் குறிகளை இடுக:

1. அஜந்தாவில் சிற்பக் கலையும் சித்திரக் கலையும் ஒருங்குகூடிக் காண்போரை மகிழ்விக்கின்றன.
2. சிறந்த பொருள்களை எளிதில் காண முடியுமா
3. தம்பி இங்கே வா என்று பாட்டி அழைத்தாள்
4. அந்தோ காந்தி அண்ணல் மறைந்தனரே
5. அண்ணா இங்கே வாருங்கள் இந்தப் பாடத்தைக் கற்றுக் கொடுங்கள்
6. என்ன ஆச்சரியம் இச் சிறுவன் சிங்கத்துடன் நின்று போராடுகிறானே
7. கந்தனும் கோபாலனும் இராமனும் நேற்று என் வீட்டுக்கு வந்தார்கள்
8. தமிழ் மன்னர் மூவர் அவர்கள் சேரர் சோழர் பாண்டியர்
9. உன் புத்தகம் இதுதானா
10. ஏது இந்தக் கனி இதுபோல் மற்றுமொருகனி கொண்டுவா என்றான் பரமதத்தன்.

131210
600 008.

## 5. கிரேக்கப் படையெழுச்சி

நம் இந்திய நாட்டுக்கு வடமேற்கில் ஐரோப்பாக் கண்டத்தில் கிரீஸ் என்னும் ஒரு நாடு உண்டு. அந்நாடு பழங்காலத்திலிருந்தே நாகரிகத்திற் சிறந்த நாடாகும். அந்த நாட்டில் வாழும் மக்கள் **கிரேக்கர்கள்** என்று வழங்கப்படுகின்றனர். நம் நாடு பண்டைக் காலத்தில் செல்வமும் சிறப்பும் உடையதாக இருந்தது. 'பொன் விளையும் பூமி' என்று உலகத்தார் யாவரும் இந்தியாவைப் போற்றிப் புகழ்ந்தனர். இதன் வளப்பத்தைக் கேட்டு அந்நிய நாட்டினர் பலர் அடிக்கடி படையெடுத்து வந்தனர். இங்ஙனம் படையெடுத்தவர்களில் **அலெக்ஸாந்தர்** என்னும் யவன மன்னரும் ஒருவராவர்.

அலெக்ஸாந்தர் ஏறக்குறைய 2300 ஆண்டுகளுக்கு முன் கிரீஸ் தேசத்தில் உள்ள **மாஸிடோனியா** என்னும் நாட்டைத் திறமையுடன் ஆண்டு வந்தார். அவர் மிகவும் சிறந்த வீரர்; உலகம் முழுவதும் உள்ள நாடுகளை வென்று, தாமே மன்னாதி மன்னராக விளங்க வேண்டுமென்னும் பேரவா உடையவர். அவர் வலிமை நிறைந்த வீரர்களைக் கொண்ட ஒரு பெரும் படையைத் திரட்டினார் முதலில் கிரீஸ் தேசம் முழுமையும் வென்றார். அதன் பின்னர் எகிப்து, பாரசீகம், ஆப்கனிஸ்தானம் முதலிய நாடுகளை வென்றார். பாரசீகத்தில் இருக்கும்போது இந்தியாவின் சீரும், சிறப்பும் கேள்விப்பட்டு அதன்மீது படையெடுக்க உறுதிகொண்டார். வடமேற்குக் கணவாய்களின் வழியாக இந்தியாவிற்குள் புகுந்து ஜீலம் நதிக்கரையில் தங்கினார்.




அக் காலத்தில் சிந்து சமவெளியை ஆண்ட இந்து அரசர்கள் தமக்குள் ஒற்றுமையின்றி ஒருவரோடொருவர் அடிக்கடிப் பகைமை கொண்டனர். அங்கு ஜீலம் நதி

யின் மேற்கில் அம்பி என்னும் மன்னனும், கிழக்கில் புருஷோத்தமன் என்னும் அரசரும் ஆண்டு வந்தனர். இருவருக்கும் இயல்பாகவே உட்பகை உண்டு. அலெக்ஸாந்தரின் படையெடுப்பைக் கண்டு அம்பி கலங்கிவிட்டான். அவன் தக்ஷசீலம் என்னும் நகரத்தை ஆண்டு வந்தான். அம்பி, புருஷோத்தமனைக் காட்டிக்கொடுத்து அலெக்ஸாந்தரிடம் தோல்வியுறச் செய்யவேண்டும். என்று உளம்கொண்டான். அதனல் அலெக்ஸாந்தருக்கு அடிபணிந்து மற்ற நகரங்களையும் வெல்வதற்கு வேண்டிய பணமும் படையும் கொடுத்து உதவினன்.

புருஷோத்தமன் அம்பியைப்போல் தம் அருமை நாட்டை அந்நிய மன்னரிடம் ஒப்படைக்க விரும்பவில்லை. அடிமை வாழ்வில் தம் நாட்டு மக்களைச் சிக்கவைக்க அவர் மனம் துணியவில்லை. அவர் மானம் பெரிது என்று வாழும் மறக்குடி மன்னர்; புறமுதுகிட்டோடும் புல்லர் அல்லர்.

அலெக்ஸாந்தரின் படையெடுப்பைக் கண்டு புருஷோத்தமன் தினைத்துணையும் அஞ்சவில்லை. ஒருபெரிய சேனையைத் திரட்டி ஜீலம் நதிக்கரையில் அலெக்ஸாந்தருடன் பெரும்போர் செய்தார். புருஷோத்தமனின் படை வீரர்கள் கருநாகம்போல் சீறிக் கிரேக்க வீரர் பலரை வீழ்த்தினர். போர் மிகவும் கடுமையாக நடந்தது. யார் தோற்பர்; யார் வெற்றியுறுவர் என்று கூறமுடியாதபடி நெடுநேரம் நடந்தது. எனினும் அம்பியின் சூழ்ச்சியினல் புருஷோத்தமன் ஏறியிருந்த பட்டத்து யானையின் துதிக்கை வெட்டப்பட்டது. துதிக்கை வெட்டுண்ட யானை வெறிகொண்டது. அது மற்ற யானைகளுடன் சேர்ந்து போரில் குழப்பம் உண்டாக்கிற்று. இறுதி

யாகப் புருஷோத்தமன் தோல்வியடைந்தார். எனினும் அவர்தம் வீரத்தைக் கண்டு அலெக்ஸாந்தர் மிகவும் வியப்புக்கொண்டார். தோல்வியுற்ற புருஷோத்தமன் அலெக்ஸாந்தர் முன் அழைத்துச் செல்லப்பட்டார். புரு ஷோத்தமனைக் கண்ட அலெக்ஸாந்தர், "புருஷோத்த மரே, உங்கள் வீரத்தைக் கண்டு நான் பாராட்டுகின் றேன். நான் தங்களை எவ்விதம் நடத்தவேண்டுமென்று விரும்புகிறீர்கள்?" என்று கேட்டார். அது கேட்ட



புருஷோத்தமன், "நீரும் மன்னன், நானும் மன்னன்; என்னையும் ஒரு மன்னனாகவே மதித்து நடத்த வேண்டும்," என்றார். தாய்நாட்டுக்காக உயிரையும் கொடுக்கச் சித்தமாய் இருந்து போராடிய புருஷோத்த மனின் வீர உரையைக் கேட்ட யவன மன்னர் மகிழ்ச்சி யடைந்து, அவருடைய நாட்டை அவருக்கே திருப்பிக்

கொடுத்துவிட்டார். அவர் வீரவுரைகளைப் பொன்னேலையில் எழுதச் செய்து தம் நிதி நிலையத்தில் வைத்துப் போற்றுமாறு அமைச்சருக்குக் கட்டளையிட்டார். புருஷோத்தமன் மீண்டும் தம் நாட்டுக்கு மன்னனுகி இனிது ஆட்சி புரிந்து வந்தார்.

அலெக்ஸாந்தர் மேலும் கிழக்கே சென்று இந்திய நாடுகளைக் கைப்பற்ற விரும்பினுர். ஆனுல் அவருடைய படைவீரர்கள் அதற்கு உடன்படவில்லை. அவர்கள் தங்கள் தாய்நாட்டுக்குச் சென்று தன் மனைவி மக்களையும், சுற்றத்தாரையும் காண விழைந்தார்கள். எனவே அலெக்ஸாந்தர் தம் தாய்நாட்டுக்குத் திரும்பவேண்டியதாயிற்று. வழியில் **பாபிலோன்** என்னும் நகரத்தில் சுர நோயால் அவர் மரணம் அடைந்தார். கிரீஸ் நாட்டுக்கும் இந்தியாவுக்கும் உள்ள தூரம் ஆயிரக்கணக்கான மைல்கள் இருப்பினும், போக்குவரவுச் சாதனங்கள் மிகக் குறைந்த பண்டைக் காலத்திலேயே அலெக்ஸாந்தர் பெரும்படை திரட்டிப் பல நாடுகளை வென்றது வியப்புக்குரிய செயலல்லவா? அதனுலன்றே அவருக்கு **'மகா அலெக்ஸாந்தர்'** என்னும் சிறப்புப் பெயரும் வழங்கலாயிற்று.

கிரேக்கப் படையெழுச்சிக்கு முன்னரே இந்தியர் கிரேக்கருடன் வாணிபம் நடத்தி வந்தனர். எனினும் கிரேக்கப் படையெழுச்சியின் பின்னரே கிரேக்கச் சிற்பக் கலையும், ஓவியக் கலையும், மருத்துவக் கலையும், வானநூற் கலையும் நம் நாட்டில் பரவலாயின. நம் நாட்டுக்கும், ஐரோப்பாவுக்கும் அலெக்ஸாந்தர் நான்கு போக்குவரவு மார்க்கங்களை ஏற்படுத்தினுர். இந்தியருக்கும் கிரேக்கருக்கும் இடையே வாணிபம் வளர்ச்சி

யடைந்தது.கிரேக்கர்களின் நல்ல பழக்க வழக்கங்களும் கைத்தொழில் முறைகளும் நம்மவரிடையே பரவின. கிரேக்க சமயக் கொள்கைகள் நம் நாட்டுச் சமயக் கருத்துக்களுடன் கலந்தன.

அலெக்ஸாந்தருக்குப்பின் அவர் வென்ற இந்திய நாடுகளை அவர்தம் சேனைத் தலைவர்களுள் ஒருவராகிய **செல்யூகஸ் நிகேடர்** என்பவர் ஆண்டுவந்தார். அவர் அலெகஸாந்தரைப்போல வன்மை யற்றவராகையால் மகதநாட்டை ஆண்ட சந்திரகுப்தர் என்னும் மௌரிய மன்னர் அவருடன் போர் செய்து காபூல் பள்ளத்தாக்கையும், பஞ்சாபையும் தம்முடைய ஆட்சியில் சேர்த்துக் கொண்டார். செல்யூகஸ் தன் மகளைச் சந்திரகுப்தருக்கு மணம் செய்து கொடுத்தார். தம் அரண்மனைப் புலவரான **மெகஸ்தனிஸ்** என்னும் அறிஞரைச் சந்திரகுப்தரின் அவையில் இருக்கச் செய்தார்.மெகஸ்தனிஸ் எட்டு ஆண்டுகள் இந்தியாவில் தங்கி யிருந்து சந்திரகுப்தரின் ஆட்சியைப் பற்றியும் மகதநாட்டு மக்களின் நடையுடை பாவனைகளைப் பற்றியும் ஒரு நூல் இயற்றினார். இந் நூலுக்கு **இண்டிகா** என்று பெயர். செல்யூகஸுக்குப் பிறகு பாக்டீரியாவை யாண்ட கிரேக்க மன்னர்கள் பன்முறை பஞ்சாபின்மீது படையெடுத்தனராயினும் அவர்களால் ஓர் ஊரையும் கைப்பற்றி ஆளமுடியவில்லை.

## பயிற்சி

**பொருளறிக :**

| | | |
|---|---|---|
| உட்பகை | புல்லர் | வானநூற் கலை |
| ஓவியக்கலை | மறக்குடி | |
| சிற்பக் கலை | யவனர்கள் | |

**விடை கூறுக:**

1. இந்தியா ஏன் "பொன் விளையும் பூமி" என்று புகழப்படுகிறது?

2. அலெக்ஸாந்தரின் இளமையைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

3. அவர் இந்தியாவை எப்படி அடைந்தார்? எங்கே தங்கினார்?

4. புருஷோத்தமனின் பெருந்தன்மையை அலெக்ஸாந்தர் எவ்வாறு அறிந்தார்?

5. 'செல்யூகஸ் நிகேடர்' என்பவர் யார்? அவரைப் பற்றிக் குறிப்பு வரைக.

6. கிரேக்கப் படையெழுச்சியின் பயன்கள் யாவை?

7. மெகஸ்தனிஸ் எழுதிய நூலின் பெயர் யாது? அதிற் கூறப்பட்டுள்ள செய்திகள் யாவை?

## இலக்கணப் பயிற்சி

அலெக்ஸாந்தர் அம்பியை வென்றார்.

அம்பி அலெக்ஸாந்தரால் வெல்லப்பட்டார்.

செயப்படுபொருள் எழுவாயாக வரும்போது எழுவாய் மூன்றும் வேற்றுமையாக வரும்.

**கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள செயப்படுபொருளை எழுவாயாக மாற்றி எழுதுக:**

1. பூனை எலியைக் கொன்றது.

2. அவன் பெட்டியைத் திறந்தான்.

3. புருஷோத்தமனின் நாட்டை அலெக்ஸாந்தர் மறுபடியும் அவருக்கே திருப்பிக் கொடுத்துவிட்டார்.

4. கோபாலன் மாம்பழம் தின்றான்.

5. நான் கற்பித்த பாடத்தை அவன் மறந்துவிட்டான்.

# 6. மின்சாரத்தின் அற்புதங்கள்

**தாமஸ் ஆல்வா எடிசன்** என்பவர் ஒரு தலை சிறந்த விஞ்ஞானி. விஞ்ஞானத்துறையில் அவர் செய்த ஆராய்ச்சிகள் எண்ணிறந்தவை. கிராமபோனையும்,



படக் காட்சியையும் கண்ட அறிஞர் எடிசனே அவர். ஒரு சமயம் மக்கள் சிலர் அவரைப் பார்த்து, "நீங்கள் செய்த ஆராய்ச்சிகளில் எதனை முதன்மையாகக் கருதுகிறீர்கள்? எது உங்களுக்கு மிக்க மகிழ்ச்சியை அளித்தது?" என்று கேட்டார்கள். அதற்கு எடிசன், "அன்பரீர். என் ஆராய்ச்சிகளில் எனக்கு இன்பம் அளித்தது பேச்சு இயந்திரமே. எனினும் மின்சார விளக்கையே நான் முதன்மையாகக் கருதுகிறேன்," என்று கூறினர். நாகரிகம் மிக்க இக்காலத்தில் மின்சாரம் நம் அன்றாட வாழ்க்கைக்கு இன்றியமையாததாக இருக்கின்றது. கண்ணுக்குப் புலப்படாத மின்சாரம் கடவுளைப் போலிருந்து செய்யும் அற்புதங்களைக் கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடையாதார் யார்?

மின்சாரம் ஒரு நல்ல வேலைக்காரனைப்போல் நமக்குப் பல வழிகளிலும் நன்மை புரிகிறது.

முதன் முதலில் மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்ட செய்திகள் அற்புதமானவை. **தேலீஸ்** என்னும் ஓர் அறிஞர் **ஆம்பர்** என்னும் மணியைத் தேய்த்தால் ஒரு வித சக்தி ஏற்படுகிறதென்றும், அதுவே மின்சாரமென்றும் கண்டார். **கால்வனி** என்னும் விஞ்ஞானி ஒருவர் வெவ்வேறு உலோகக் கம்பிகள் இரண்டைக்கொண்டு ஒரு தவளையின் கால்களைத் தொட்டார். உடனே அத் தவளை தன் கால்களை 'வெடுக்'கென்று உள்ளுக் கிழுத்து உதைத்தது. இதனால் அவர் இரண்டு உலோகங்கள் பிராணியொன்றின் உடலில் படும்போது மின்சார சக்தி ஏற்படுவதாக உணர்ந்தார். அமெரிக்க ஆறுகளில் வசிக்கும் **ஜிம்னோடஸ்** என்னும் விலாங்கு மீன்களாலும், ஆப்பிரிக்காக் கண்டத்தில் நைல் நதியில் உள்ள **பூனைமீன்**களாலும், கடலில் இருக்கும் **திருக்கைமீன்**களாலும் பழங்கால மக்கள் தாக்குண்ட போது அதிர்ச்சி யுற்று மிகவும் வருந்தினர். பின்னர் அவற்றின் வால், உடம்பு, தலை ஆகிய உறுப்புக்களிலிருந்து தோன்றும் மின்சாரத்தினாலேயே அவர்களுக்கு அத்தகைய துன்பம் ஏற்பட்டதென அறிந்தார்கள். தற்காலத்தில் மின்சாரமும், மின்னலின் சக்தியும் ஒன்றே என்பதை மக்கள் நன்கு அறிவர்.

விஞ்ஞானிகள் பலர் இடைவிடாது உழைத்த உழைப்பின் பலனால் மின்சாரம் செய்யும் முறைகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. காந்தக் கட்டைகளில் கம்பிச் சுருளைச் சுற்றுவதனாலும், **ஸெல்கள்** என்னும் மின் கலங்களினாலும் மின்சாரம் எடுக்கிறார்கள்.

மேடான இடங்களிலிருந்து பள்ளமான இடங்களில் விழும் நீர்வீழ்ச்சியில் உள்ள சக்தியைக் கொண்டும் மின்சாரம் உண்டாக்குகிறார்கள். நம் நாட்டில் மேட்டூர், சிவசமுத்திரம், பைகாரா முதலிய இடங்களில் உள்ள நீர்வீழ்ச்சிகளிலிருந்து இத்தகைய மின்சாரம் எடுக்கிறார்கள். மின்சாரத்தைக் கம்பிகளின் வழியாகச் செலுத்தி அவரவர்கட்கு வேண்டும் தொழிலுக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

நம் வீடுகளில் ஒரு பொத்தானைத்தட்டினால்வீட்டில் உள்ள மின்சாரக் குமிழ்விளக்குகள்'பளிச்'சென்றுநிலா



வெளிச்சம்போல் ஒளி வீசுகின்றன. இவ் விளக்குகள் எரிவதற்கு எண்ணெயும் வேண்டாம்; தீக்குச்சும் வேண்டாம்; காற்று மழை இவற்றால் இவை அணைந்துவிடும் என்றபயமும் இல்லை. நம் நண்பர், உறவினர் எவரேனும் நாம் வீட்டினுள் ளிருக்கிறோமா என்று அறிய வெளியிலிருந்து ஒரு பொத்தானை அமிழ்த்தினால் போதும். உடனே 'கிணுங் கிணுங்' கென்று மின்சார மணி ஒலிக்கத் தொடங்கி விடும்.

மின்சாரம் எல்லா வகையான இயந்திரங்களையும் இயக்கவல்ல ஆற்றல் படைத்தது. வீடு பெருக்குதல் பால் கறத்தல், சமையல் செய்தல், நெல் குத்துதல், தானியங்களைப் பருப்பாக்குதல், உடை தைத்தல், சலவை செய்தல், காற்று விசிறுதல், மாவரைத்தல் போன்ற எல்லாக் குடும்ப வேலைகளையும் மின்சாரம் ஒழுங்காகச் செய்கின்றது. நாம் எளிதில் செல்ல முடி

யாத மாடிகளில் மின்சாரம் நம்மைக் கண்ணை மூடித் திறப்பதற்குள் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகிறது.



ஒருவர் ஓரிடத்தில் நின்று பாடுவதையும், பேசுவதையும் அப்படியே வேறு இடங்களில் இருப்பவர்கள் வானெலியின் மூலம் கேட்டு மகிழச்செய்வது மின்சாரமேயன்றோ? அயலூரில் இருக்கும் நம் நண்பர்களும் உறவினர்களும் தமக்குண்டாகும் இன்பதுன்ப நிகழ்ச்சிகளை உடனுக்குடன் நமக்குத் தெரிவிக்கும் தந்தியை இயக்குவது எது? மின்சாரமல்லவா?

தாழ்ந்த உலோகங்களால் செய்யப்பட்ட பாத்திரங்களுக்கும், நகைகளுக்கும் வெள்ளி அல்லது தங்க முலாம் பூசுவதற்கு மின்சாரம் பயன்படுகிறது. முலாம் பூசுவதற்கு வேண்டிய உலோகப் பொருளை நன்ருகத் துலக்கித் தங்கம் அல்லது வெள்ளிக்கரைசலில் அமிழும்படி தொங்கவிட வேண்டும். பின்னர் அக்கரைசலில் மின்சாரத்தைச் செலுத்தினுல் வேண்டிய பொருளின்மேல் வெள்ளி அல்லது தங்க முலாம் படியும். மின்சாரத்தின் உதவியால் நாம் டிராம், இரெயில் முதலிய ஊர்திகளில் ஏறி எண்ணியவிடங்கட்குத் துண்ணெனச் செல்கின்ருேம். இவ்வண்டிகள் தரையில் பதிக்கப்பட்டிருக்கும் தண்டவாளங்களில் ஓடுகின்றன. இவற்றின் மேலே தடித்த கம்பிகள் செல்வதைப் பார்த்திருக்கிறீர்களா? அக் கம்பிகளிலிருந்து ஓர் இணைப்பின் மூலமாக இயந்திரங்களுக்கு மின்சாரம் பாய்வதால்தான் வண்டிகள் ஓடுகின்றன. சென்னை, பம்பாய், கல்கத்தா

போன்ற நகரங்களில் இத்தகைய வண்டிகளைக் காண லாம்.

ஓரிடத்திலிருந்து கொண்டே வேறு இடங்களிலிருக் கும் மக்களுடன்பேசுவதற்குப்பயன்படும்**டெலிபோன்** என்னும் கருவி இயங்குவதற்கும் மின்சாரம் இன்றி யமையாததாகும். **கம்பியில்லாத் தந்தி**களின் மூலம் வெகுதூரம் செய்திகளை உடனுக்குடன் தெரிவிப்பதற் கும் மின்சாரம் சிறந்த துணையாகும். **டெலிவிஷன்** என் னும் ஓர் அற்புதக் கருவியும் மின்சாரத்தினுலேயே இயங்குகின்றது. அது நூற்றுக் கணக்கான மைல் களுக்கு அப்பாலிருந்து பேசுகிறவர்களையும், பாடுகிறவர் களையும், நடிப்பவர்களையும் அப்படியே நம் வீட்டில் அமைத்திருக்கும் திரையில் காணும்படி செய்கிறது. மருத்துவர்கள் நரம்பு சம்பந்தமான சில நோய்களைப் போக்குவதற்கும்மின்சாரசக்தியைஉபயோகிக்கிருர்கள்.

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் சிற்றுண்டிச் சாலைக்குச் செல்வோர் தமக்கு வேண்டிய பொருள்களின் விலையை இயந்திரங்களில் குறிப்பிடப் பட்ட ஒரு கருவியில் நுழைந்ததும், ஒரு தட்டில் வேண் டிய பொருள் வெளியே வந்து நிற்கும். அவர்கள் அதை உண்ட பிறகு எச்சிற் கலங்களையும் கரண்டிகளையும் கழுவி, துடைத்து, உலர்த்தி, அடுக்கி வைப்பதற்கும் மின்சாரம் உபயோகப்படுகிறது. தொழிலாளர் பலர் நெடுநேரம் செய்யக்கூடிய வேலையைச் சிறிது நேரத்தில் செய்து முடிக்கும் மின்சாரத்தின் ஆற்றலை என்னென் பது!

மின்சாரத்தினுல் மேற்கூறிய அற்புதங்கள் நிகழ் கின்றன வென்று அறிந்தோம், மேலும் பலப்பல அற்

புதங்களும் ஏற்படக்கூடும். இதனுல் பல தீமைகளும் ஏற்படுவதை நாம் காண்கிருேம். தீமைகளை நீக்கி நன்மைக்கே இதனைப் பயன்படுத்தி நாம் வளமுற வாழ்வோமாக.

## பயிற்சி

| | | |
|---|---|---|
| ஆற்றல் | எண்ணிறந்த | செலுத்தி |
| இணைப்பு | ஒலி | புலப்படாத |
| இயக்குதல் | ஒளி | வீழும் |

கீழ்வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

| | |
|---|---|
| தலைசிறந்த | துண்ணென |
| முதன் முதலில் | உடனுக்குடன் |
| வெவ்வேறு | நூற்றுக்கணக்கான |

**எதிர்ப்பதம் கூறுக:**

தாழ்ந்த, இன்பம், எளிது, அயலூர், தடித்த.

**விடை தருக:**

1. தாமஸ் ஆல்வா எடிசன் என்பவர் யார்? அவர் மின்சாரத்தைப் பற்றி என்ன கூறியுள்ளார்?

2. மின்சாரம் பழங்காலத்தில் எங்கெந்த விதங்களில் கண்டு பிடிக்கப்பட்டது?

3. தற்காலத்தில் மின்சாரத்தை எங்ஙனம் உற்பத்தி செய்கிருர்கள்?

4. நம் நாட்டில் எவ்வெவ்விடங்களில் நீர்வீழ்ச்சிகளிலிருந்து மின்சாரம் எடுக்கப்படுகிறது ?

5. மின்சாரத்தினுல் நடைபெறும் குடும்ப வேலைகள் யாவை ?

6 மின்சாரத்தினுல் வண்டிகள் எவ்வாறு ஓடுகின்றன ?

7. பாத்திரங்களுக்கு வெள்ளிமுலாம் பூசுவதெப்படி?

8. 'டெலிஷன்' என்னும் கருவியைப்பற்றிக் குறிப்பு எழுதுக.

9. அயல் நாடுகளில் மின்சாரத்தினுல் ஏற்பட்டுள்ள அற்புதங்கள் யாவை ?

10. மின்சாரத்தினுல் தற்காலத்தில் நமக்கு ஏற்படும் நன்மைகள் யாவை?

**தெரிந்து கொள் :**

1. 'மின்சாரமும் அதன் அற்புதங்களும்' என்பது பற்றிச் செய்தித் தாள்களிலும் உங்கள் நூல் நிலையப் புத்தகங்களிலும் உள்ள செய்திகளை அறிந்துகொள்.

2. உங்கள் ஊரில் மின்சாரத்தின் மூலம் இயங்கும் இயந்திரங்களைப் பற்றியும் அவை வேலை செய்யும் விதங்களைப் பற்றியும் தெரிந்துகொள்.

# 7. வெளிநாட்டுக் கடிதங்கள்

## 1. சீனக் கடிதம்

பீக்கிங்,
22-12-'52.

அன்புள்ள இந்திய நண்பர்களே,

என் பெயர் **பெங்க் ஹோ**. எனக்கு வயது பனிரண்டு. நான் ஆறும் வகுப்பில்படிக்கிறேன். **போ-சியா-சீயே** என்னும் ஆரம்பப்பள்ளியில் படிக்கிறேன். இஃது எங்கள் தேசத்தின் தலைநகரான **பீக்கிங்**கில் உள்ளது.



இந்தக் கடிதத்தை உங்களுக்கு நான் எழுத வேண்டும் என்று சொன்னபோது, என் இந்திய நண்பர்களே, நான் இன்பக் கடலில் திளைத்தேன். ஏனென்றால் இந்தியாவைப் பற்றி நாங்கள் பூகோள வகுப்பில் படித்தோம். இந்தியா எங்கள் தேசத்தின் தெற்கில் இருக்கும் சகோதர தேசமென்றும், அஃது ஏராளமான மக்கள் தொகையைக் கொண்ட பெரிய நாடு என்றும் எங்கள் ஆசிரியை சொன்னார்கள். அத்துடன் இந்தியாவைப்பற்றிய பல படங்களையும் காட்டினார்கள். ஒரு படத்தில் நாங்கள் இந்திய யானை ஒன்றைப் பார்த்தோம். அது மிகப் பெரியதாக இருந்தது. ஒரு காலத்தில் நான் இந்தியாவுக்கு வருவேன். அப்போது உங்

களை யெல்லாம் பார்ப்பேன் ; அந்தப் பெரிய யானைகளை யும் பார்ப்பேன்.

எங்கள் பள்ளியிலுள்ள இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் ஒரு பிரிவுக்கு நான் தலைவனாக இருக்கி றேன். அந்தக் கழகத்திலுள்ள ஒவ்வொருவனின் கடமையும் என்ன தெரியுமா? அவன் நல்ல மாணவ னாக இருக்க வேண்டும். பெரியவனானதும் நல்ல குடி மகனாக இருந்து நாட்டுக்குச் சிறந்த தொண்டு செய்ய வேண்டும். சங்கீதம், விஞ்ஞானம்,பொம்மை விமானம் செய்தல், இலக்கியம், கலை முதலியவற்றில் ஆர்வமுள்ள வர்களைச் சேர்த்துப் பற்பல பிரிவுகளாக இக் கழகத் தினர் அமைத்திருக்கிறார்கள். இந்தப் பிரிவுகளில் எதில் வேண்டுமானாலும் இளைஞர் கழகத்தினர் சேரலாம்,

நான் மாதிரி ஆகாய விமானம் செய்யும் பகுதியில் ஈடுபட்டு இருக்கிறேன். உலகிலேயே மிகமிக வேக மாகப் பறக்கக்கூடிய ஆகாய விமானத்தை நான் என்றா வது ஒருநாள் செய்யவேண்டுமென்று ஆசைப்படுகி றேன். எதற்காக? போர் செய்வதற்காக அன்று, அதை ஓட்டிக்கொண்டு உலகின் பல பாகங்களுக்கும் சென்று ஒவ்வொரு நாட்டிலும் உள்ள நண்பர்களைப் பார்த்து வருவேன். அங்ஙனம் சுற்றி வரும்போது நான் இந்தியாவுக்கும் வருவேன். அப்போது எனக்கு நீங்கள் உங்கள் தேசத்திலுள்ள பெரிய காடுகளைக் காட்டுவீர்கள். எல்லாவிதமான பெரிய மரங்களையும் நான் காண்பேன். அத்துடன் விலங்குகளையும் காண வேண்டும். ஏனென்றால், நான் வருங்காலத்தில் ஒரு பெரிய உயிரின ஆராய்ச்சியாளனாக வேண்டு மென்று ஆசைப்படுகிறேன். நான் காட்டிலே ஆராய்ச்சி

செய்து பலவகை மரங்களையும், மலர்களையும், விலங்குகளையும் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

நான் செடிகளை நட்டு, அவற்றை வளர்க்க விரும்புகிறேன். எங்கள் வீட்டின் பின்புறத்தில் நான் ஒரு சின்னஞ் சிறிய தோட்டம் வைத்துள்ளேன். அதில் தக்காளி பயிரிடுகிறேன். சென்ற கோடை காலத்தில் எட்டுப் பெரிய தக்காளிக் காய்கள் கிடைத்தன.

எனக்கு ஜாலவித்தை யெல்லாம் செய்யத் தெரியும். அதை நான் செய்து காட்டும்போது என் நண்பர்களின் மகிழ்ச்சிக்கு அளவே இராது. அவர்கள் என்னைக் **குட்டி மந்திரவாதி** என்று அழைப்பார்கள். ஒரு முட்டையைக் கைக்குட்டையாக மாற்றும் வித்தை கூட எனக்குத் தெரியும்!

இன்னும் எவ்வளவோ செய்திகள் சொல்ல வேண்டும். ஆனால் நேரமில்லை. இத்துடன் நான் நிறுத்திக்கொள்கிறேன். ஒரு காலத்தில் நாம் ஒருவரையொருவர் சந்திப்போம். உங்களில் யாராவது உயிரின ஆராய்ச்சியாளனாகப் பிரியப்படுகிறீர்களா? இந்தியாவில் நீங்கள் என்ன மாதிரித் தக்காளிகளைப் பயிரிடுகிறீர்கள் என்பதை அறிய ஆவல். யானைகள் எங்கே வசிக்கின்றன என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

உங்கள் அன்புள்ள,

**பெங் ஹோ.**

## 2. எகிப்துக் கடிதம்

அலெக்ஸாந்திரியா,
11-10-'52.

அன்புள்ள சகோதர சகோதரிகளே,

நான் ஒரு கிரேக்கப் பெண். **அலெக்ஸாந்திரியா**வில் வசிக்கிறேன். என் பெயர் **ஹெலன் பயாஸோஸ்.**



என் வயது பதினேந்து. அக்டோபர் 16-ஆம் தேதி என் பிறந்த நாள். நான் உயரமாக இருக்கிறேன். சிவந்த பழுப்புநிறக் கண்கள், குட்டையான செம்பட்டை மயிர், கரியநிறத் தோல் இவைகளை நான் பெற்றிருக்கிறேன்.

என் பெற்ரோர்களும் நானும் அலெக்ஸாந்திரியாவில் பிறந்தோம். இங்குத்தான் இப்போது நான் வசித்து வருகிறேன். எனக்கு ஒரு தங்கை உண்டு. அவள் பெயர் மேரி. ஒரு புருவையும் ஐந்து கானரிப் பறவைகளையும் நான் வளர்த்து வருகிறேன்.

அலெக்ஸாந்திரியாவிலுள்ள ஆங்கிலப் பெண் கல்லூரி (English Girls' College) யில் நான் படித்து வருகிறேன். பள்ளியில் 'டென்னிஸ்', 'ஹாக்கி' முதலிய பந்தாட்டங்களை நாங்கள் ஆடுவோம். நீந்துவதற்குக் கூட அங்கே வசதியான குளம் ஒன்று இருக்கிறது. ஆண்டுக்கு ஒரு முறை நாங்கள் எங்களுடைய நீந்தும் திறமையைக் காட்டுவோம்.

எனக்கு மிகவும் பிடித்தமான பாடம் விளையாட்டுத் தான். இதைக் கேட்க உங்களுக்குச் சிரிப்பு வருகிறதா? எங்களுக்கு விளையாட்டுக்கூட ஒரு பாடந்தான். ஒவ்வொரு நாளும் நாங்கள் அந்தப் பாடத்தைக் கட்டாயமாகக் கற்கவேண்டும். பள்ளிக்கூட 'ஹாக்கி' குழுவிலும், வலைப்பந்துக் குழுவிலும் நான் உறுப்பினளாக இருக்கிறேன். நான் பல நாட்டுத் தபால் 'கார்டு'களையும், நடனப்படங்களையும் சேகரித்து வருகிறேன். எனக்கு நடனம், விளையாட்டு, கடிதம் எழுதல் முதலியவற்றில் ஆர்வம் அதிகம். ஸ்பெயின் நாட்டுக்கும், ஹாவாய்த் தீவுக்கும் சென்று பார்த்து வரவேண்டும் என்பதே என் கனவு. நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன் கிரீஸ் தேசத்துக்குச் சென்றிருந்தேன். அந்த நாட்டை நான் மிகவும் விரும்புகின்றேன்.

மருத்துவ வகுப்புகளுக்கு நான் விருப்பத்துடன் செல்கிறேன். சென்ற கோடை விடுமுறையில் கிரேக்க மருத்துவ விடுதியில் எவ்வளவோ செய்திகளைக் கற்றுக் கொண்டேன். முதல் உதவி செய்தல், ஊசி குத்துதல், கட்டுக் கட்டுதல், 'ஆபரேஷன்' செய்யும் முறை, நோயாளிகளுக்கு உதவுதல் முதலியவற்றைக் கற்றுக் கொண்டிருக்கிறேன்.

உங்களுக்கு இப்போது எகிப்து தேசத்தைப் பற்றிச் சிறிது சொல்லப் போகிறேன். உங்களில் சிலர் எகிப்துக்கு வந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்! இஃது ஒரு பெரிய நாடு. எகிப்தில் பார்ப்பதற்குப் பல சிறந்த இடங்கள் இருக்கின்றன. **பிரமிட்** என்ற பெரிய கோபுரங்களும், சிங்க உடல் அமைந்த மனிதச் சிலைகளும் முக்கியமானவை. எகிப்தைப் பற்றிக் கூறும்

போது, அதை **நைல் நதியின் நன்கொடை** என்று அழைக்கிறார்கள். நைல் நதி இல்லாவிடின் எகிப்து ஒரு பாலைவனமாகப் போயிருக்கும். நைல் நதி கெய்ரோ நகரத்தின் வழியாக ஓடுகிறது.

எகிப்தின் முக்கிய ஏற்றுமதி பருத்திதான். அது இங்கேயே பயிரிடப்படுகிறது. எகிப்தின் மக்கள்தொகை சில ஆண்டுகளாக அதிகமாகிக் கொண்டே வருகிறது. பல நாடுகளிலிருந்து மக்கள் வந்து இங்குக் குடியேறி வருகிறார்கள்.

நான் உங்களுக்குக் கடிதம் எழுதுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். என் கடிதத்தைப் படிப்பதிலும் நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள் என்று எண்ணுகிறேன்.

சில ஆண்டுகளில் நான் இந்தியாவுக்கு வரலாம். ஆனல், நீங்கள் எகிப்துக்கு வருவதற்கு மட்டும் மறந்து விடாதீர்கள்! உங்களுக்கு எப்போதும் நல்வரவேற்பு இருக்கும்.

என்றும் அன்புள்ள உங்கள் எகிப்தியச் சகோதரி,

**ஹெலன் பயாஸோஸ்.**

## 3. ஜெர்மன் கடிதம்

டஸல்டார்ப்,
16-11-'52.

அன்புள்ள இந்தியச் சிறுவர் சிறுமிகளே,

நான் ஒரு ஜெர்மனியப் பெண். என் பெயர் **இங் பார்க்பேயர்.** நான் 1934-ஆம் ஆண்டில் பிறந்தேன்.



எங்கள் நாட்டுத் தட்ப வெப்ப நிலைக்கும் உங்கள் நாட்டுத் தட்பவெப்ப நிலைக்கும் வேற்றுமை உண்டு. மிகவும் உஷ்ணமான கோடைக்காலம் எப்படி யிருக்கும் என்பதே எங்களுக்குத் தெரியாது. 'ஜில்' லென்ற குளிர் காலந்தான் எங்களுக்குத் தெரியும்.

நான் என் பெற்றோருடனும் ஒரு தம்பி ஒரு தங்கையுடனும் **டஸல்டார்ப்** என்னும் நகரில் வசிக்கிறேன். இது **ரைன் நதி**க் கரையில் இருக்கிறது. இது தொழிற்சாலைகள் நிறைந்த மிக முக்கியமான நகரம். இந் நகரம் மக்கள் நெருக்கமுள்ள பிரதேசத்தில் இருக்கிறது.

நான் உயர்நிலைப் பள்ளியில் படித்துவருகிறேன். ஏனைய பாடங்களுடன், பிரெஞ்சு, ஆங்கிலம், இலத்தீன் ஆகிய மூன்று அந்நிய மொழிகளையும் கற்று வருகிறேன். ஜெர்மனியில் நாங்கள் ஆறும் வயதில் பள்ளிக்குப் போகிறோம்; பத்தொன்பதாம் வயதில் பள்ளிப் படிப்பை முடித்துக் கொள்ளுகிறோம். எங்கள் பள்ளிப்

படிப்பை இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். அதன்படி ஆரம்பப் பள்ளியில் முதல் வகுப்பிலிருந்து நான்காம் வகுப்புவரை படிக்கவேண்டும். பிறகு, உயர்நிலைப் பள்ளியில் ஒன்பது ஆண்டுகள் படிக்கவேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் ஆரம்பப் பள்ளிக்குக் கட்டாயமாகச் சென்று படித்தாக வேண்டும்.

விளையாடுவது, படிப்பது, வெளிநாடுகளுக்குச் செல்வது இவைகளே என் பொழுது போக்குகள். சென்ற கோடை விடுமுறையில் நான் என் தங்கையுடன் சைக்கிளிலே பிரான்சுக்கும், ஸ்விட்ஸர்லாந்துக்கும் சென்றிருந்தேன். அப்படிச் சென்றிருந்தபோது நாங்கள் இரவு நேரங்களில் சிறுவர் விடுதிகளில் தங்கியிருந்தோம். அப்போது பெரும்பாலும் ஐரோப்பாவின் எல்லா இடங்களிலிருந்தும் வந்த பல சிறுவர்களையும் சிறுமிகளையும் சந்தித்தோம்.

இந்தியாவைப் பற்றிய சில புத்தகங்களை நான் படித்திருக்கிறேன். அவை என் உள்ளத்தைக் கவர்ந்தன. உங்கள் நாட்டைப் பற்றி இன்னும் அதிகமாகத் தெரிந்துகொள்ள அவாவுகிறேன்.

உங்கள் ஜெர்மன் சகோதரி,

**இங்பார்க் பேயர்.**

## பயிற்சி

**பொருளறிக :**

| | |
|---|---|
| அவா | திளைத்தேன் |
| உறுப்பினள் | நன்கொடை |
| குடிமகன் | மருத்துவ விடுதி |

**கீழ் வருவனவற்றை நும் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :**

இன்பக் கடலில், ஏராளமாக, பெரும்பாலும், நல்வரவேற்பு.

**விடை கூறுக :**

1. சீனக் குழந்தைகள் இந்தியாவைப் பற்றி என்ன அறிந்துள்ளார்கள் ?
2. சீனப் பள்ளிக்கூடத்துக் கல்விமுறையைப் பற்றி உனக்கு என்ன தெரியும் ?
3. எகிப்தியச் சிறுமியின் விருப்பம் என்ன ?
4. 'நைல் நதியின் நன்கொடை' எது ? அதன் பெயர்க் காரணம் கூறுக.
5. ஜெர்மன் நாட்டுக் கல்வி முறையைப் பற்றி இங்பார்க் பேயர் என்ன கூறுகிருள் ?

**தெரிந்து கொள் :**

கானரி என்னும் தீவிலிருந்து கொண்டு வந்து வளர்க்கப்பட்ட பறவைகளுக்குக் கானரிப் பறவைகள் என்று பெயர்.

## 8. சுதந்திர நாட்டில் மாணவர் கடமை

பரம்பரை பரம்பரையாக அடிமைத் தளையிற் சிக்கியிருந்த நம் திருநாடு மகாத்மா காந்தியடிகள், ஜவஹர்லால் நேரு, வ. உ. சிதம்பரம் பிள்ளை, மகாகவி பாரதியார் போன்ற அரிய தலைவர்களின் திருப்பணியால் இன்று உரிமை பெற்று விளங்குகின்றது. 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று இன்று நாம் இறும்பூது கொள்வதற்குக் காரணம் அன்னாரின் தன்னலமற்ற தியாகமேயன்றோ? இன்று மக்களாட்சி நடைபெறுகிறது. இப் பேற்றை நாம் அனுபவிக்கும் வாய்ப்புப் பெற்றிருக்கின்றோம்.

இக் காலத்துச் சிறுவர்களே பிற்காலப் பெரியோர்கள். நமது நாட்டின் முன்னேற்றம் இக் கால இளைஞர்கள் கையிலிருக்கின்றது. எனவே நம் நாட்டு நலத்திற்கான துறைகளில் சிறுவயதிலேயே பயிற்சி பெறுவது மாணவ மாணவியரின் சீரிய கடமையாகும். நாட்டிற்கான ஒழுங்கு முறைகளுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்க வேண்டியவர்கள் மாணவர்களே. 'நாமிருக்கும் நாடு நமதென்ப தறிந்தோம்' என்னும் பாரதியாரின் கனவு பலித்திருக்கும் இக்காலத்தில் தேசசேவை புரிவதில் மாணவர்கள் அனைவரும் புத்துணர்ச்சியும் மகிழ்ச்சியும் கொள்ளுதல் வேண்டும். நல்ல பழக்கங்களையும் பண்புகளையும் வளர்ப்பதற்கேற்ற பருவம் இளமைப் பருவமே. மாணவர்கள் அறிவுப் பயிற்சியுடன் கைத்தொழில், சமூக சேவை முதலிய துறைகளிலும் சிறந்த பயிற்சி பெறுதல் வேண்டும்.

சுதந்திரம் என்னும் சொல்லுக்கு அவரவர் தத்தம் மனம் போன போக்கில் நடப்பதென்பது பொருளன்று.

தாம் எத்துணைச் செல்வமும் கல்வியும் படைத்தவர்களாயினும் சமுதாயக் கட்டுப்பாடுகட்கும் பொதுச் சட்ட திட்டங்களுக்கும் அடங்கி நடப்பதே நேர்மையானது. நம்மினும் அறிவிலும் அனுபவத்திலும் நிறைந்த பெரியோர்கள் வகுத்த முறைகளினின்று மாறுபட்டு நடப்பது நாட்டுக்கே தீமை விளைவிப்பதாகும். மாணவர்கள் தம் இளமைப் பருவ முதலே தலைவனுக்கு அடங்கி நடக்கும் தன்மை, ஒற்றுமை, விடாமுயற்சி முதலிய நற்குணங்களைப் பெற்றுத் தமக்கும் பிறர்க்கும் நன்மையான காரியங்களையே செய்ய முற்படுதல் வேண்டும்.

மாணவர்கள் தாம் கற்கும் கல்வி, உத்தியோகம் பெறுதற்பொருட்டே என்னும் மனப்பான்மை கொள்ளலாகாது. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் படித்துப் பட்டதாரிகளாக வெளிவருகின்றனரே! இவ்வெல்லோருக்கும் உத்தியோகம் கிடைப்பதென்பது முயற்கொம்பே. ஆகையால், மாணவர்கள் சிறு வயதிலேயே ஏதாவதொரு கைத்தொழிலில் திறமை பெறவேண்டும். இதனை அறிந்தே நம் சுதந்திர அரசியலார் பள்ளிக்கூடங்களில் நூல் நூற்றல், ஆடை நெய்தல், சாயம் போடுதல் முதலிய தொழிற் கல்வியை மாணவர்கட்குப் போதிக்குமாறு ஏற்பாடுகள் செய்துள்ளனர். பள்ளிப் படிப்பு முடிந்ததும் அவரவர் தத்தமக்கு விருப்பமானதொரு கைத்தொழிலைச் செய்து போதிய வருவாய் உடையவராதல் வேண்டும்.

நாட்டிற் பிறந்த மக்கள் அனைவரும் நம் நாட்டுப் பொருள்களையே வாங்கிப் பயன்படுத்துவது சிறந்த தேச சேவையாகும். அந்நிய நாட்டுப் பொருள்களையே

நாம் ஆதரித்துக் கொண்டிருப்பின் நம் நாட்டுக் கைத் தொழிலும் வாணிபமும் விரைவில் நசித்துவிடக்கூடும். நம் நாட்டிற் செய்யப்படும் பொருள்கள் அந்நிய நாட்டுப் பொருள்களைப் போல் உறுதியும் வனப்பும் உடையனவா யில்லையே என்று சிலர் குறை கூறுவர். படித்தவர்கள் தொழில் திறமை பெருமையே இதற்குக் காரணமாகும். கல்வி கற்ற மாணவர்கள் பிறநாடுகளுக்குச் சென்று தொழில் நுணுக்கங்களை உணர்ந்து நம் நாட்டுக் கைத்தொழிலை வளர்க்கப் பாடுபடுதல் வேண்டும்.

அடுத்ததாக மாணவர்கள் கடமைகளிற் சிறந்தது கிராமத் தொண்டு. நம் நாடு ஏழு லட்சம் கிராமங்களைக் கொண்டது. கிராமத்தார்கள் நகரத்தாருடன் தொடர்பு கொண்டு வாழ்வதே நாட்டு வளர்ச்சிக்கு அடிப்படையாகும். இன்றைய கிராமவாசிகளின் நிலைமை என்ன? அவர்கள் வறுமை, கல்வியின்மை, மூடப்பழக்கங்கள் முதலியனவற்றால் அல்லலுறுகின்றனர். கிராம முன்னேற்றத்தில் நம் அரசியலார் தம் கருத்தைச் செலுத்தி வருகின்றனர். அவர்களுடன் நாமும் ஒத்துழைத்தல் இன்றியமையாததாகும். மாணவர்கள் தம் ஓய்வு நேரங்களிலும் விடுமுறை நாட்களிலும் கிராமங்கட்குச் சென்று எழுத்து வாசனையற்ற முதியோர்க்குக் கல்வி கற்பிக்கலாம்; அன்றாடம் நடக்கும் உலக நிகழ்ச்சிகளைக் கூறலாம்; விவசாயம், கைத்தொழில் முதலிய துறைகளில் கையாளவேண்டிய புதிய முறைகளைப் பற்றி விளக்கிப் பேசலாம்; அவர்கள் தூய்மையான வாழ்க்கை நடத்தவும் பிணக்குகளின்றி ஒற்றுமையாக வாழவும் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்யலாம்.

கிராம மக்கள் பெரும்பாலும் உழவுத் தொழிலே புரிகின்றனர். பயிரிடுங் காலந்தவிர மற்ற நேரங்களில் அவர்கள் ஒரு தொழிலுமின்றி வறிதே காலங் கழிக்கின்றனர். அக் காலங்களில் எளிதில் செய்யக் கூடிய நூல் நூற்றல், ஆடை நெய்தல், கூடை முடைதல், கோழி வளர்த்தல் போன்ற சிறு தொழில்களைப் புரியுமாறு அவர்களை ஊக்குதல் வேண்டும். கிராமவாசிகளும் நமது சகோதரர்களே என்னும் மனப்பான்மை கொண்டு அவர்களுடன் பழகவேண்டும். மக்கள் அனைவரும் 'ஓரினம்; ஒரு குலம்' என்று எண்ணிப் பொதுப் பணிகள் புரியவேண்டும்.

நம் நாடு பண்டைக் காலத்திலிருந்தே கல்வி, கலை, நாகரிகங்களிற் சிறப்புடையது. அந்நியர் ஆட்சியில் தம் சொந்த நாட்டுப் பண்பாடுகளை மக்கள் அறவே மறந்தனர். மக்கள் அயல் நாட்டு நாகரிகங்களிலும், நடையுடை பாவனைகளிலும் அவாக் கொண்டதால் நம் நாட்டுச் செல்வம் சிதைவுற்றது; கலைகள் மறைந்தன. இனியேனும் நம் நாடு பண்டுபோல் நன்னிலை பெற நாம் நம் நாட்டு மொழி, கலை, நாகரிக வளர்ச்சியில் கருத்துக் கொண்டு சேவை புரிதல் வேண்டும். அரசியல், பொருளாதாரம், வாணிபம், கைத்தொழில், கல்வி என்னும் பற்பல துறைகளிலும் நம் நாடு உலக அரங்கில் முதன்மை பெற நாம் பாடுபடுதல் வேண்டும்.

## பயிற்சி

**பொருளறிக:**

| | | |
|---|---|---|
| அரங்கு | பிணக்கு | வகுத்த |
| இறும்பூது | மனப்பான்மை | வறிதே |
| எடுத்துக்காட்டு | | |

**வாக்கியங்களிற் சேர்த்து எழுதுக :**

பரம்பரை பரம்பரையாக, முற்பட, அன்றுடம், முதன்மை பெற.

**விடை கூறுக :**

*1.* நம் நாடு விடுதலைபெறப் பாடுபட்ட பெரியோர் கள் சிலரைக் கூறுக.

*2.* மாணவர்கள் இளமைப் பருவத்திலேயே கைக் கொள்ள வேண்டிய அருங்குணங்கள் யாவை?

*3.* நாம் ஏன் நம் நாட்டுப் பொருள்களையே ஆதரிக்க வேண்டும்?

*4.* விடுமுறை நாட்களில் மாணவர்கள் எங்ஙனம் கிராம சேவை செய்யலாம்?

*5.* நம் நாடு பண்டைக் காலத்துப் பெருமைகளை அடைய நாம் என்ன செய்யவேண்டும்?

## இலக்கணப் பயிற்சி

i. இவர் நம்மை ஆளும் தலைவர்.

ii. நம்மை ஆளும் தலைவர் இவர்.

இவ்விரண்டு வாக்கியங்களில் முதல் வாக்கியத்தில் இவர் என்பது எழுவாய்; தலைவர் என்பது பயனிலை. இரண் டாம் வாக்கியத்தில் தலைவர் என்பது எழுவாய்; இவர் என் பது பயனிலை. இதனல் எழுவாயாக வந்த பெயர் பயனிலை யாகவும், பயனிலையாக வந்த பெயர் எழுவாயாகவும் வருத லும் உண்டு என அறிக.

பின்வரும் பெயர்களை எழுவாயாகவும் பயனிலையாக வும் வருமாறு வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

1. கண்ணன்—பசு.
2. கிளி—பறவை.
3. வந்தவன்—பொன்னன்.
4. தமிழ்—மொழி.
5. நீங்கள்—ஆதரித்தவர்கள்.

13210

# அருஞ்சொல் அகராதி

அகழி - கோட்டையைச் சுற்றிலு-முள்ள நீர்நிலை
அபூர்வம் - அற்புதம்
அரங்கு - மேடை
அலுப்புற்று - களைத்து
அவா - ஆசை, விருப்பம்
ஆய்ந்த - ஆராய்ந்த
ஆற்றல் - சக்தி
இணைந்து - சேர்ந்து
இணைப்பு - சந்திப்பு
இயக்குதல் - அசைத்தல்
இளவல் - தம்பி
இறும்பூது - பெருமிதம்
உட்பகை - வெளிக்குத் தெரியாமலிருக்கும் பகை
எடுத்துக்காட்டு - உதாரணம்
எண்ணிறந்த - கணக்கில்லாத
ஒலி - ஓசை
ஒளி - வெளிச்சம்
ஓவியக்கலை - சித்திரக்கலை
கடல்கோள் - கடலால் கொள்ளப்படுதல்
கலை - ஓவியம், இசை, நாட்டியம் போன்ற வித்தைகள்
கழகங்கள் - சங்கங்கள்
கிளர்ச்சி - எழுச்சி
குதூகலித்தல் - மகிழ்ச்சி யடைதல்
கோடாது - தவறாமல்
கோன்முறை - அரசநீதி
சமயம் - மதம்
சிற்பம் - கோயில் முதலியவை கட்டும் சாத்திரம்
சூழ்நிலை - சுற்றுப்புற நிலைமை
செலுத்தி - புகுத்தி
செறிந்து - நெருங்கி
தளபதி - படைத்தலைவன்
திட்டம் - ஏற்பாடு
திளைத்தேன் - மகிழ்ந்தேன்
துர்க்கம் - மலையிடுக்கு வழி
துறை - வகை
தொடர்பு - சம்பந்தம்
தொண்டு - சேவை
படைத்து - செய்து
பண்பாடு - அருங்குணங்கள்
பிடர் - கழுத்து
பிணக்கு - மாறுபாடு
புகட்டுதல் - எடுத்துக் கூறுதல்
புலப்படாத - கண்ணுக்குத் தோன்றாத
பூழியர்கோன் - பாண்டியன்
பேராறு - பெரிய ஆறு
மறக்குடி - வீரக் குடும்பம்
மனப்பான்மை - உள்ளத்தின் தன்மை
யவனர் - அரேபியர் (கிரேக்கரையும் குறிக்கும்)
வதிந்தன - வசித்தன
வறிதே - வீணாக
வாணிபம் - வியாபாரம்
வானநூற்கலை - வானத்தைப் பற்றியும், வானத்தில் உள்ள பொருள்களைப் பற்றியும் கூறும் வித்தை
வீழும் - விழும்
வேழம் - யானை